Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :257 ஆடி 29ஆம் நாள் வியாழக்கிழமை 13 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

அமைச்சர்கள் முழு விவரம்!

பக்கம் 11

## 6 மணிநேரம் ரிஷாத்திடம் விசாரணை

கொழும்பு, ஓக. 13
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்று சுமார் 6 மணிநேரம் விசாரணை நடத்தியுள்ளனர். ரிஷாத் நேற்றுக் காலை 15 ➤

## மிதந்துவந்தது 294 கிலோ கஞ்சா

யாழ்ப்பாணம், ஓக. 13
பருத்தித்துறை கடலில் மிதந்து வந்த நிலையில், 294 கிலோகிராம் கஞ்சா நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.
கடற்படையினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோதே மேற்படி மர்மமான பொதிகள் கடலில் மிதந்து வந்தமையை அவதானித்து, அவற்றைச் சோதனையிட்டனர். அதன்போதே அவை கஞ்சாப் பொதிகள் என தெரிந்துகொண்டனர். அவற்றின் நிறை 294 கிலோகிராம் என்று கடற்படையினர் 15 ➤

## அங்குசம் யாருக்கு?

யாழ்ப்பாணம், ஓக. 13
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவிக்கு மேலும் மூவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ரணில் விக்கிரமசிங்கவின் உறவினரான முன்னாள் இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன, பாலித ரங்கே பண்டார மற்றும் நவீன் திஸாநாயக்க ஆகியோரின் பெயர்களே புதிதாக முன்மொழியப்பட்டுள்ளன.
ஐக்கிய தேசியக்கட்சியின் 15 ➤

### பலத்த பரபரப்புகளிடையே நாளைமறுதினம்

# அவசரமாகக் கூடுகின்றது தமிழரசின் அரசியல் குழு

கொழும்பு, ஓகஸ்ட் 13
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு நாளைமறுதினம் திருகோணமலையில் அவசரமாகக் கூடுகின்றது. கட்சியின் அரசியல் குழுத் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.
இந்தத் தகவலை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் கட்சியின் பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம் ஆகியோர் 'உதயன்' பத்திரிகையிடம் நேற்றிரவு உறுதிப்படுத்தினார்கள். 15 ➤

## சசிகலாவுக்கே தேசியப்பட்டியலை வழங்குவதற்கு திட்டமிட்டிருந்தேன்

### மனம் திறக்கின்றார் மாவை

யாழ்ப்பாணம், ஓக. 13
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த தேசியப் பட்டியலில் சசிகலாவை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதற்கே திட்டமிட்டிருந்தேன். எனினும் கட்சி மட்டத்திலும் புலம்பெயர் தேசத்து ஆதரவாளர்களின் வலியுறுத்தலின் அடிப்படையிலுமே தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குச் செல்ல நான் சம்மதித்தேன் என்று தெரி 15 ➤

### வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும்

## ஒருங்கிணைப்புக் குழுவுடைய இணைத் தலைவராக ஆளுநர்!



யாழ்ப்பாணம், ஓக. 13
யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கின் அனைத்து மாவட்டங்களின் இணைத் தலைவராக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் 15 ➤

## கண்டியில் நேற்று பறந்தன தனிச் சிங்களக் கொடிகள்!

கொழும்பு, ஓக. 13
அமைச்சரவை நேற்றுப் பதவியேற்கும் வேளை இலங்கைச் சிறுபான்மையினத்தவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறங்கள் நீக்கப்பட்ட 'தனிச் சிங்களக் கொடிகள்' கண்டியில் பறக்கவிடப்பட்டன.
இலங்கையின் தேசியக்கொடியில் தமிழர்களையும், முஸ்லிம்களையும் பிரதிபலிக்கும் நிறங்கள் நீக்கப்பட்ட 'தனிச் சிங்கக்கொடி' கண்டி மாநகரத்தில் பறக்கவிடப்பட்டமையைத் தொடர்ந்து, அதன் காணொலிகள் சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டன. 15 ➤

## யாழ். துணைவேந்தர் தெரிவில் முதல் நிலையில் சிறிசற்குணராஜா

### மதிப்பீட்டுக் குழு முன்மொழிந்தது

யாழ்ப்பாணம், ஓக. 13
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருப்பவர்களில் மதிப்பீட்டின் அடிப்படையில் முதலாமிடத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், தொழில்நுட்ப பீடம் ஆகியனவற்றின் முன்னாள் பீடாதிபதியும், கணித புள்ளிவிவரவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளருமானபேராசிரியர் 15 ➤

### 16 பவுண் கொள்ளை

## சந்தேகநபர்கள் எண்மர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 13
மானிப்பாய் பகுதியில் நள்ளிரவு வேளையில் வாளைக் காட்டி வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி 16 பவுண் நகைகளைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் வட்டுக்கோட்டை 15 ➤

## சர்வ மதங்கள் மஹிந்த மயம்

### 13க்கு போர்க்கொடி தூக்கிய வீரசேகரவுக்கு மாகாண சபைகள் அமைச்சு

கொழும்பு, ஓக. 13
இந்து சமய விவகார, முஸ்லிம் சமய விவகார மற்றும் கத்தோலிக்க சமய விவகார அமைச்சுகள் நீக்கப்பட்டு, மேற்படி அமைச்சுகளின்கீழ் 15 ➤

## இராஜாங்க அமைச்சர்களுக்கான துறைகள் கேலிக்குரியவை!

### மங்கள விமர்சனம்

கொழும்பு, ஓக. 13
புதிய அமைச்சரவையில் இராஜாங்க அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள துறைகள் கேலிக்குரியவை - என்று தெரிவித்துள்ளார் முன்னாள் நிதி அமைச்சரான மங்கள சமரவீர.
இது தொடர்பில் தனது கீச்சகத்தில் நேற்றுப் பதிவொன்றை மேற்கொண்டுள்ள மங்கள 15 ➤



## பிரணாப் முகர்ஜி கவலைக்கிடம்!

15 ➤

# மக்களின் விடுதலை பற்றி பேசுகின்ற எம்.பி.க்களை இணைக்க முயற்சிப்பேன்

## கூறுகின்றார் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

**வவுனியா, ஓக. 13**
**மக்களின் விடுதலை என்று பேசுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைத்து நாடாளுமன்றில் ஒரு குழுவாகச் செயற்படும் முயற்சியை விரைவில் எடுக்கவுள்ளேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

வவுனியா கற்குழி பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினை மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக வேகமான செயற்பாட்டை முன்னெடுக்கவேண்டும் என்பதை இந்தத் தேர்தல் எமக்கு உணர்த்தியுள்ளது.

யாழ்ப்பாணத்திலும் ஒரு விசித்திரம் நடந்திருக்கின்றது. இ.அங்கஜன் கூடுதலான வாக்குகளைப் பெற்றிருக்கின்றார். தேசியத் தலைவருடைய இடத்தில்தான் எனக்கு கூடுதலான வாக்குகள் கிடைத்திருக்கின்றன என்று அவர் தெரிவித்திருந்தார். இங்கு தேசியத்தின் நிலையைப் பாருங்கள்.

எனினும், வன்னியைக் குறை சொல்லமுடியாது. வன்னி தனது கடமையைச் செய்திருக்கின்றது.

ஓர் ஆசனம் குறைந்திருந்தாலும் தேசியத்தையும் மக்களின் சிந்தனையையும் அது சுட்டிக்காட்டியிருக்கின்றது. எனினும், இரண்டு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்களுடைய வாக்குகளால் வெற்றிபெற்றிருக்கின்றார்கள். அது கவலைக்குரிய விடயமே.

இந்தத் தேர்தலில் எமது இருப்பைக் கேள்விக்குறியாக்கியவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருக்கின்றார்கள். தமிழர்கள் பூர்விகமா னவர்கள் இல்லை என்று சொல்லும் அவர்கள், அந்த சிந்தனையை எப்படியும் நிலைநாட்டுவார்கள்.

எமது மக்களின் வாக்களிப்பை பார்க்கும் போது தேசியத்தை விட அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுத்திருக்கின்றமையை அவதானிக்கமுடிகின்றது.

பெரும்பான்மை பெற்றுள்ள அரசு அபிவிருத்தியையும் முன்னெடுத்து அதனுடன் இணைந்து தேசியத்தின் தன்மையை உடைக்கின்ற செயற்பாட்டையும் மேற்கொள்ளும். இவை எமக்குச் சவாலாக இருக்கப்போகின்றது. எனவே நாங்கள் தூங்கமுடியாது. எமது மண்ணைக் காக்கின்ற பொறுப்பு எம் தலைமேலே சுமத்தப்பணட்டிருக்கின்றது.



எங்களைப்பொறுத்தவரை காணமல்போனோர் மற்றும் அரசியல் கைதிகள் விடயங்கள் முக்கியமா னவை. அவை எமக்கு விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தன. இந்த விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படும். அதற்கான அழுத்தங்கள் கொடுக்கப்படும்.

தேர்தலின்போது கூட்ட மைப்புக்குள்ளேயும் பல பிரச்சினைகள் இருந்தன. வெளியில் இருந்தும் பலர் விமர்சி த்தார்கள். எங்களுக்குள்ளேயே நாம் சண்டையிட்டோம். இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி சிங்களக் கட்சிகள் தமது காரியத்தைச் செயற்படுத்தியுள்ளன. எனவே மக்களின் விடுதலை என்று பேசுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைத்து நாடாளுமன்றில் ஒரு குழுவாகச் செயற்படும் முயற்சியை நாம் எடுக்கவுள்ளோம். அதிலே வரக்கூடியவர்கள் வரலாம். அதற்கான பேச்சு விரைவில் மேற்கொள்ளப்படும்.

மக்களின் சிந்தனை கூட்டமைப்புக்கு உணர்த்தப்பட்டிருக்கின்றது. மக்கள் எமக்கு நல்லபாடம் தந்திருக்கின்றார்கள். அதனை இனியும் உணரவில்லையாயின் கூட்டமைப்பை கடவுளாலும் காப்பாற்றமுடியாது. எனவே மக்களுக்கான முழுநேர பணியாளர்களாக நாம் இருப்போம். எதைச் செய்யவேண்டும் என்று எமக்கு நீங்கள் கட்டளையிடுங்கள். என்றார்.

(த-110)

---

# குருதித்ததான நிகழ்வு இன்று

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் வருடாந்த குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. காலை 8 மணியிலிருந்து மதி யம் 1 மணி வரை வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ள இரத்ததான நிகழ்வில் குருதிக் கொடையாளர்களை இணைந்து கொள்ளுமாறு வைத்திய சாலை நோயாளர் நலன்புரிச்சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (ரி1)

---

# கசிப்புடன் மூவர் கைது

கிளிநொச்சி, ஓக.13

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு ஊழவனூர் பகுதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 19 லீற்றர் கசிப்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன், இவர்கள் மூவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் இன்று நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று தர்மபுரம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சிசெர தெரி வித்துள்ளார்.

(ரி2-113)

---

# அரசமைப்பில் மாற்றம் செய்யும்போது பல தரப்பையும் உள்ளடக்கி ஆராயவும்!

## வலியுறுத்துகின்றார் முன்னாள் சபாநாயகர் கரு

கொழும்பு, ஓக. 13

அரசமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய விரிவானதொரு கலந்துரையாடல் நடத்த வேண்டும். அரசமைப்பில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ள இது அவசியமானதும் முக்கியமானதுமாகும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்திருக்கிறார்.

தனது ருவிட்டர் பக்கத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2020 ஓகஸ்ட் 5 பொதுத்தேர்தலில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பதற்கான ஆணையை மக்கள் வழங்கியிருக்கின்றார்கள். தகவல் அறியும் உரிமைச்சட்டம் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் உருவாக்கம் உள்ளிட்ட பல்வேறு ஜனநாயகத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்த அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் இல்லாதொழிக்கப்படுமா அல்லது மாற்றியமைக்கப்படுமா என்றவாறான கரிசனைகள் அதிகரித்துள்ளன. இந்த நிலையிலேயே முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய இதுகுறித்து தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் நாட்டு மக்களால் வழங்கப்பட்டிருக்கும் ஆணை, அரசமைப்பில் திருத்தங்களை ஏற்படுத்துவதற்கும் புதிய வரைபுகளைக் கொண்டு வருவதற்கும் அரசுக்கு வாய்ப்பை வழங்குகின்றது. எனினும், அவ்வாறு ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இதனுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்துக்கொண்டு செயற்படுவது மிகவும் அவசியமாகும். எனவே அரசமைப்புத் திருத்த செயற்பாடுகளைப் பொறுத்தவரையில் அதற்காக விரிவானதொரு கலந்துரையாடல் செயன்முறை பின்பற்றப்பட வேண்டும். என்று குறிப்பிட்டுள்ளார்.

(த)

---

# தனிமைப்படுத்தலில் இருந்த மூன்று கர்ப்பிணிகள் யாழ். போதனாவுக்கு

யாழ்ப்பாணம், ஓக.1 3

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படைத்தள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்கு உட்பட்டிருந்த கர்ப்பிணிப் பெண்கள் மூவர் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அந்த மூவருக்கும் மகப்பேற்றுக் காலம் நெருங்கியதனால் அவர்கள் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

டுபாயில் இருந்து வருகைதந்த 256 பேர் கடந்த 9ஆம் திகதி கேப்பாபிலவு விமானப்படைத்தள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் கர்ப்பிணிப் பெண்கள் மூவரும் உள்ளடங்குகின்றனர்.

(ரி-119)



## அன்று அமைச்சர்கள் இனி எம்.பிக்கள்

கொழும்பு, ஓக. 13
2010, 2015 ஆம் ஆண்டுகளில் அமைந்த அரசுகளில் அமைச்சுப் பதவிகளை வகித்த சிலருக்கு இம்முறை அமைச்சுப் பதவி எதுவும் வழங்கப்படவில்லை.

மஹிந்த ஆட்சி அதன் பின்னர் அமைந்த நல்லாட்சி ஆகியவற்றில் எஸ்.பி.திஸாநாயக்க, சுசில் பிரேமஜயந்த, அனுர பிரிய தர்சன யாப்பா, ஜோன் செனவிரத்ன ஆகியோர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவிகளை வகித்துள்ளனர்.

ஆனால், நேற்று வழங்கப்பட்ட 28 பேர் கொண்ட அமைச்ச ரவையில் இவர்களுக்கு இடம் வழங்கப்படவில்லை. அத்துடன், விஜயதாச ராஜபக்ஷவும் சாதாரண எம்.பியாகவே சபைக்கு வரவுள்ளார்.

இம்முறை தேசியப்பட்டியல் ஊடாக தெரிவாகியுள்ள பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண மஹிந்த ஆட்சியில் அமைச்சு பதவி வகித்துள்ளார். இம்முறை அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அதேவேளை, மைத்திரிபால சிறிசேனவும் அமைச்சரவைக்கு உள்வாங்கப்படவில்லை. (ஒ.5,44)

# அமைச்சரவையில் 4 ராஜபக்ஷக்கள்!

## மருமகனுக்கும் பதவி

**கொழும்பு, ஓக. 13**
**சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையில் அமைந்துள்ள புதிய அரசின் அமைச்சரவையில் நான்கு ராஜபக்ஷக்கள் இடம்பெற்றுள்ளனர்.**

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவி வகிக்கும் கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சராகச் செயற்படுவார்.

பிரதம அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ நிதி, புத்தசாசனம், கலாசார விவகாரங்கள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதி அமைச்சராக பதவியேற்றுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் மூத்த சகோதரரான சமல் ராஜபக் ஷ நீர்ப்பாச னத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கும் நாமல் ராஜபக் ஷ முதன்முறை அமைச்சரவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளார். இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ராஜபக்சக்களின் மருகனான மாத்தறை மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப்பெற்ற நிபுண ரணவக்க மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவராகப் பதவியேற்றுள்ளார். (ஒ.5,44)



## தே.ம.சக்தியின் தேசியப் பட்டியலில் பேராசிரியர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஓக.13
தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு பேராசிரியர் ஹரிணி அமரசூரிய பெயரிடப்பட்டுள்ளார். நேற்று இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளோம் என அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. இதனையடுத்து, பல்கலைக்கழக பேராசிரியர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு, நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கவுள்ளேன் என ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (ரி1)

## கோத்தாவின் 'வியத்கம' உறுப்பினர்கள் ஐவருக்கு இராஜாங்க அமைச்சு பதவி

### தொண்டாவின் மகனுக்கும் இராஜாங்க அமைச்சு

கொழும்பு, ஓக. 13
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் நேரடி வழிகாட்டலுடன் இயங்கிய 'வியத்கம' என்ற அமைப்பிலிருந்து இம்முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவான 10 பேரில் ஐவருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப்பெற்ற சரத் வீரசேகர, கம்பஹா மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப்பெற்ற பேராசிரியர் நாலக கோட்டேகொட ஆகியோருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அனுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிட்ட பேராசிரியர் சன்ன ஜயசுமனவுக்கும் இராஜாங்க அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேசியப்பட்டியல் ஊடாக வாய்ப்பளிக்கப்பட்ட மருத்துவர் சீதா அரம்பேபொல, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரும் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலர் ஜீவன் தொண்டமான், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் ஆகியோருக்கும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (ஒ.5,44)

## மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர்கள் நியமனம்

கொழும்பு, ஓக.13
யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக அங்கஜன் இராமநாதனும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக டக்ளஸ் தேவானந்தாவும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

9ஆவது நாடாளுமன்றத்துக்கான 28 அமைச்சுக்கள் மற்றும் 40 இராஜாங்க அமைச்சர்களின் பதவியேற்பு நிகழ்வு நேற்றுக் காலை கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் உள்ள மகுல் மடுவ மண்டபத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அனைத்து மாவட்டங்களுக்குமான மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர்கள் நியமனமும் வழங்கப்பட்டது.

கொழும்பு மாவட்டத்துக்கு பிரதீப் உதுகொடவும், கம்பஹா மாவட்டத்துக்கு சஹான் பிரதிப் விதானவும், களுத்துறை மாவட்டத்துக்கு சஞ்ஜீவ எதிரிமானவும், கண்டி மாவட்டத்துக்கு வசந்த யாப்பா பண்டாரவும், மாத்தளை மாவட்டத்துக்கு எம்.நாலக பண்டார கோட்டேகொடவும், நுவரெலியா மாவட்டத்துக்கு எஸ்.பி.திஸாநாயக்கவும், காலி மாவட்டத்துக்கு சம்பத் அத்துக்கோரளவும், மாத்தறை மாவட்டத்துக்கு நிபுண ரணவக்கவும், அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு உபுல் கலஹபத்தியும், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு அங்கஜன் இராமநாதனும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு டக்ளஸ் தேவானந்தாவும், வவுனியா மாவட்டத்துக்கு கே.திலீபனும், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு கே.காதர் மஸ்தானும், அம்பாறை மாவட்டத்துக்கு டி.வீரசிங்கமும், திருகோணமலை மாவட்டத்துக்கு கபில அத்துக்கோரளவும், குருநாகல் மாவட்டத்துக்கு குணபால ரத்னசேகரவும், புத்தளம் மாவட்டத்துக்கு அசோக பிரியந்தவும், அனுராதபுரம் மாவட்டத்துக்கு எச். நந்தசேனவும், பொலன்னறுவை மாவட்டத்துக்கு அமரகீர்த்தி அத்துக்கோரளவும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட ஒருங்கிணைப்பு இணைக் குழுத் தலைவர்களாக பதுளை மாவட்டத்துக்கு சுதர்ஷன தெனிப்பிட்டியவும், மொனராகலை மாவட்டத்துக்கு குமாரசிறி ரத்னாயக்கவும், இரத்தினபுரி மாவட்டத்துக்கு அகில எல்லாவலவும், கேகாலை மாவட்டத்துக்கு இராஜிகா விக்ரம சிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (எ)

# பங்காளிகளுக்கும் அமைச்சுக்கள்! இரு தமிழ் பேசும் அமைச்சர்கள்!!

கொழும்பு, ஓக. 13
சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ கடந்த முறையும் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த நிலையில் இம்முறை பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதயகம்மன்பில, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

எனினும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்றைய தினம் அமைச்சுப் பதவி எதுவும் வழங்கப்படவில்லை. அத்துடன், அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ள தேசிய காங்கிரஸின் தலைவர் அதாவுல்லாவுக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை.

ஈ.பி.டிபியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, ராஜபக் ஷ ஆட்சியில் வழமைபோல இம்முறையும் அமைச்சரவையில் இடம்பிடித்துள்ளார்.

அதேபோன்று தேசியப்பட்டியல் ஊடாக நியமிக்கப்பட்ட அலி சப்ரிக்கு நீதி அமைச்சு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச வெற்றிபெற்ற பின்னர், அமைந்த இடைக்கால அரசின் அமைச்சரவையில் இரண்டு தமிழர்கள் உள்வாங்கப்பட்டிருந்தனர். டக்ளஸ், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் அமைச்சுப் பதவிகளை வகித்தனர்.

ஆறுமுகன் தொண்டமான் காலமானதால் அவரின் மகன் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அவருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. எனவே, இம்முறை அமைச்சரவையில் ஒரு தமிழரும், ஒரு முஸ்லிமும் இடம்பிடித்துள்ளனர்.

அதேவேளை, 30 பேர் கொண்ட அமைச்சரவையில் 28 பேருக்கே பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் இருவரை நியமிக்க முடியும் என்பதால் மைத்திரி, அதாவுல்லா போன்றவர்களுக்கு இரண்டாம் சுற்றில் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது (ஒ.5,44)

# மணிவிழாவும் சேவை நயப்பும்

கொடிகாமம்,ஓக.13

கொடிகாமம்திருநாவுக்கரசுமத்தியகல்லூரிஅதிபர்கண பதிப்பிள்ளை மங்களேஸ்வரனது மணிவிழாவும், சேவை நயப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் நடை பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகநிர்வாகம்பிரதிக்கல்விபணிப்பாளர் செல்வி இ. அபிராமி மற்றும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய அதிபர்ப. சந்திரபாபு, கொடிகாமம்திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் ஓய்வு நிலை பிரதி அதிபர் வை.மனோகரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாகாண மட்ட பண்ணிசைப்போட்டியில் முதலாம்இடத்தைப்பெற்றமாணவர்களுக்கானசான்றிதழ்கள் வழங்கப்பட்டன

உயர் தொழில்நுட்ப பிரிவில் முதன்மை நிலை பெறும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்நிதியாக 50 ஆயிரம் ரூபாவை மணிவிழாநாயகனின்பாரியார்திருமதிபு.மங்களேஸ்வரன் பிரதி அதிபரிடம் கையளித்தார்.

மணி விழா நாயகனுக்கு அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், விருந்தினர்கள் மாலை அணிவித்துபொன்னாடைபோர்த்திவாழ்த்துப்பாமாலை வழங்கி மதிப்பளித்தனர். (ஜ-159)



# ஐ.தே.கவை சஜித்தால் கைப்பற்றவே முடியாது

## கட்சியின் தலைமை எனக்கே என்கிறார் வஜிர அபேவர்தன



கொழும்பு. ஓக.13

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் எனக்கு வழங்கப்பட வேண்டும் என்பதைக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் நானாகக் கேட்பேன். தலைமைத்துவத்தை எனக்கு வழங்குவார்கள் என்ற நம்பிக்கையும் அதற்கான வாய்ப்புகளும் அதிகமாக உள்ளன. சஜித் பிரேமதாசவினால் ஐக்கிய தேசியக் கட்சியைக் கைப்பற்ற முடியாது. அதற்கு நாம் இடமளிக்கவும் மாட்டோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ மாற்றம் மற்றும் அடுத்த கட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறியவர்கள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ள முடியும். அதனை நாம் ஒருபோதும் தடுக்க மாட்டோம். ஐக்கிய தேசியக் கட்சி எவரையும் நிராகரிக்கும் கட்சி அல்ல. இன்று தனித்துச் செயற்படும் அனைவரும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் நிலை உருவாகும். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியை எவரும் ஆக்கிரமிக்கலாம் என நினைப்பது தவறான விடயமாகும். அது ஒருபோதும் நடக்காத விடயம் என்பதையும் அனைவரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். சஜித் பிரேமதாச இன்று தற்காலிக வெற்றியைப் பெற்றுக்கொண்டு எமக்குச் சவால் விடுத்து வருகின்றார். அவரது அணியில் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியை கைப்பற்றுவதாகக் கூறுகின்றனர். ஆனால் சஜித் பிரேமதாஸ வினால் ஐக்கிய தேசியக் கட்சியைக் கைப்பற்ற முடியாது. அதற்கு நாம் இடமளிக்கவும் மாட்டோம். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தான் கட்சியின் தலைமைத்துவத்தைக் கைவிடுவதாக கூறியுள்ளார். தான் தலைமைப் பொறுப்பில் இருந்தது போதும் எனக் கூறியுள்ளார். ஆகவே கட்சி இப்போது மாற்று தலைமைத்துவம் குறித்து சிந்தித்து வருகின்றது.

கட்சியின் தலைமைத்துவத்திற்கு நால்வரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. செயற்குழு கூட்டத்தில் இதற்கான தீர்மானம் முன்னெடுக்கப்படும் - என்றார். (ப)

## உயிரிழந்ததை உறுதிப்படுத்த

# பாதாள உலகத் தலைவனின் கைவிரல் அடையாளங்கள் இந்தியாவுக்கு

கொழும்பு, ஓக.13

பாதாள உலகத் தலைவனான 'அங்கொட லொக்கா' உயிரிழந்துள்ளாரா என்பதை உறுதிப்படுத்துவதற்கான மரபணுப் பரிசோதனைக்குத் தேவையான மாதிரி மற்றும் கைவிரல் அடையாளங்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

இந்த மாதிரிகள் வெளிவிவகார அமைச்சு மற்றும் இந்தியத் தூதரகம் ஊடாக குறித்த விவகாரம் தொடர்பில் தற்போது விசாரணைகளை முன்னெடுக்கும் சி.பி.ஐ. எனப்படும் இந்திய மத்திய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

கொலை, கொள்ளை, கப்பம் கோரல் உள்ளிட்ட பல திட்டமிட்ட குற்றங்கள் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த, பிரபல பாதாள உலகத் தலைவன் அங்கொட லொக்கா என அறியப்படும் மத்துமகே லசந்த சமிந்த பெரேராவின் இறப்புத் தொடர்பில் 27 வயதான அமானி தான்ஜி , 36 வயதான சட்டத்தரணி சிவகாம சுந்தரி மற்றும் எஸ். தியாகேஸ்வரன் ஆகிய மூவர் சந்தேகத்தில் இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். 27 வயதான அமானி தான்ஜி என்ற பெண் இலங்கையிலிருந்து இந்தியா சென்று கோயம்புத்தூர் சேரன்மாநகரில் அங்கொட லொக்காவுடன் வசித்து வந்துள்ளாரா என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்த நிலையில் அவரையும் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

பிரதீப் சிங் என அடையாளத்தைக் கொண்டிருந்த அங்கொட லொக்கா, நெஞ்சு வலி காரணமாக கோயம்புத்தூரில் வைத்தியசாலையொன்றில் அமானி தான்ஜி, என்ற குறித்த பெண்ணால் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

மயக்க நிலையில் இருந்த லொக்கா அவ்வாறே உயிரிழந்துள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எனினும் இலங்கையின் ஊடகங்கள் அவர் விஷம் கொடுக்கப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என செய்தி வெளியிட்டிருந்தன. அங்கொட லொக்கா உயிரிழந்துவிட்டாரா அல்லது உயிரிழந்துவிட்டதாகக் கூறி நாடகமாடுகின்றாரா என்பதை உறுதி செய்ய விசாரணைகளை சி.பி.ஐ. ஆரம்பித்துள்ளது. அந்த விசாரணைகளுக்காகவே, மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# எதிராளிகளையும் ஒன்றிணைத்து கூட்டமைப்பை கட்டியெழுப்புவேன்

கொழும்பு, ஓக.13

கூட்டமைப்புக்கு எதிராக வாக்களித்த மக்களையும் ஒன்று சேர்த்து கட்சியைக் கட்டியெழுப்புவேன் என இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எனக்கு வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் அனைவருக்கும் பொதுவான நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவேன். வருங்காலத்தில் தமிழ்த் தேசியத்தை கட்டியெழுப்புவது எனது மிக முக்கியமான கடமையாக இருக்கும். தமிழரசுக் கட்சியை மீளக் கட்டியெழுப்பி வெற்றியை நோக்கிக் கொண்டுசெல்வதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுப்பேன். கட்சியின் மத்திய குழுஎடுக்கும்தீர்மானங்களைக் கட்டியெழுப்புவது எனது கடமை. கிழக்கை மீட்கப் போகின்றோம் என வும் பிரதேச வாதங்களையும் பேசி வாக்குகேட்டவர்கள் அனைவரும் அமைச்சுப் பதவிகளை இந்த அரசாங்கத்திடம் கோரவேண்டும். அதன் மூலம் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம். அதனைவிட தமிழ்த் தேசியத்தைப் புறக்கணித்து அபிவிருத்திக்காக வாக்களித்த மக்கள் அவர்களின் காரியாலயத்தை முற்றுகையிட்டு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற அழுத்தங்களை வழங்க வேண்டும். எங்களிடமும் வாருங்கள் தமிழர்களுக்கு எங்காவது அநீதி நடந்தால், தமிழர்களின் நில அபகரிப்பு, தமிழர்களுக்கு எதிராக ஏதாவது அநீதி நடைபெற்றால் அதற்கு எதிரான குரலை நாங்கள் வழங்குவோம். எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்.

உரிமையுடன் கூடிய அபிவிருத்தியைச் செய்வோம் என்ற அடிப்படையில் தமிழர்களின் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் செய்யக்கூடிய அனைத்து அபிவிருத்திகளையும் செய்வோம். அத்தோடு சர்வதேச சமூகத்துடன் இணைந்து சில வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். அபிவிருத்தி செய்வோம் என்று கூறிவந்தவர்கள் செய்ய முடியாத சில வேலைத்திட்டங்களை நாங்கள் செய்வோம். கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தாமை காரணமாகவே அங்குள்ள மக்கள் வேறு கட்சிக்கு வாக்களிக்கும் நிலைமை ஏற்பட்டது. அம்பாறை மாவட்டம் வடகிழக்கு மாகாணத்தின் முக்கிய பகுதியாகும் -என்றார். (ப)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 'பற்றிக்'கும் நல்லிணக்கமும்!

அடுத்த ஐந்து வருடங்களுக்கு இலங்கையை ஆளப்போகும் புதிய அமைச்சரவைக்கான பதவிப்பிரமாணம் நேற்று அலரி மாளிகையில் தடல்புடலாக நடந்தேறியது. அமைச்சரவை அந்தஸ்துள்ள 25 அமைச்சர்களும் 33 இராஜாங்க அமைச்சர்களும் இந்த நிகழ்வில் பதவியேற்றுக் கொண்டனர். இதில் நான்கு பேர் ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அடுத்த ஐந்து வருடங்களும் குடும்ப ஆட்சி எப்படி இலங்கையில் கோலோச்சப் போகின்றது என்பதற்கு இந்த அமைச்சரவையே நல்லதொரு முன்னுதாரணம்.

அதைவிட, இனப்பிரச்சினை தொடர்பிலான மிக முக்கியமான ஒரு செய்தியையும் புதிய அமைச்சரவை சொல்லி நிற்கின்றது. 'பற்றிக்' கைத்தறி துணி உற்பத்திக்குக்கூட ஒரு இராஜாங்க அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த நல்லாட்சி அரசில் மனோ கணேசனுக்கு வழங்கப்பட்டிருந்த அரச கரும மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சு இருந்த இடம் தெரியாமல் காணாமல் போயுள்ளது.

இதன்மூலம் இன நல்லிணக்கம் தொடர்பில் ராஜபக்ஷக்களின் அரசாங்கம் பெயருக்குக்கூட அக்கறை எடுக்கப்போவதில்லை. பல்லின மக்களும் வாழ்கின்ற இலங்கையில் இன முரண்பாடு இந்தளவு தூரம் முற்றிப் பெருத்தமைக்கு முதல் காரணம் மொழிப் பரவலாக்கம் இன்மையே. ஒவ்வொரு இனத்தவரும் தத்தம் தாய்மொழியை மாத்திரமே கற்றறிந்து வைத்திருந்தனரே தவிர பெரும்பாலானோர் தம் சக இனத்தவரின் மொழிகளை கற்றுணரத் தவறி விட்டனர். இது இனங்களுக்கு இடையிலான புரிதலின்மையை அதிகப்படுத்தி முரண்பாட்டை உச்சத்துக்குக் கொண்டுசென்றிருந்தது.

இந்த நிலையிலேயே ஒவ்வொரு இனத்தவரும் தம் சக இனத்தவரின் பிரச்சினையை அறிந்துகொள்வதன் ஊடாக தமக்கு இடையிலான முரண்பாட்டை நீக்கி நல்லிணக்கத்தை ஓரளவுக்கேனும் உண்டுபண்ணும் நோக்கில் அரச கருமமொழிகள் அமைச்சு புதிதாக உருவாக்கப்பட்டு நல்லிணக்க அமைச்சோடு இணைத்து மனோ கணேசனுக்கு கொடுக்கப்பட்டது. இதன்மூலம் பெருமளவுக்கு தங்கள் தாய்மொழியோடு சேர்த்து பிற மொழிகளையும் கற்றறியும் சூழல் இலங்கையர்களுக்கு ஏற்பட்டிருந்தது. அத்தோடு எங்கெல்லாம் தமிழ், சிங்கள மொழிகள் புறக்கணிப்புக்கு உள்ளாகின்றனவோ அங்கெல்லாம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு குறித்த புறக்கணிப்பால் எழக்கூடிய பின்விளைவுகள் இல்லாமல் ஆக்கப்பட்டிருந்தன. இந்த நடவடிக்கை தொடர்ந்திருந்தால் காலப்போக்கில் இலங்கையில் வாழும் சகலரும் நாட்டுக்குள் எந்தப் பகுதிக்கும் மொழி பற்றிய பிரச்சினை இல்லாமல் சென்று வாழக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கும்.

ஆனால், இப்படியெல்லாம் நல்லது நடப்பது ராஜபக்ஷக்களுக்கு பிடிக்காதே. அவர்களின் வாக்கு மூலதனமே இனவாதம்தான். நல்லிணக்கம் ஏற்பட்டு இனவாதத் தீ அணைந்துவிட்டால் எப்படி அவர்கள் அரசியல் செய்ய முடியும். அதனாலேயே 'பற்றிக்' துணிகளுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தைக்கூட அரசகருமமொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சுக்குக் கொடுக்காமல் அதனைத் தூக்கி குப்பைத் தொட்டியில் கடாசிவிட்டனர். அதற்குப் பதிலாக பௌத்த பல்கலைக்கழகங்கள் மற்றும் பிரிவெனாக்கல் பௌத்த மறைக்கல்வி என்ற புதிய இராஜாங்க அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது. பௌத்தமும் சிங்களமும் மட்டுமே இலங்கையில் நிலைத்திருக்க முடியும். மற்றையவையெல்லாம் எங்களுக்கு ஒரு பொருட்டேயில்லை என்று ராஜபக்ஷக்கள் சொன்ன வாழ்க 'பற்றிக்': வீழ்க நல்லிணக்கம்! என்ற செய்தி அமைச்சரவையைத் தாண்டி இனி நாடெங்கும் எதிரொலிக்கத்தான் போகின்றது.

# அரசுடன் பேச நாமும் தயாரில்லை சர்வதேசத்துடனேயே பேசுவோம்

### தினேஸுக்கு செல்வம் தடாலடி

**மன்னார், ஓக.13**

**தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை அரசின் மீது நம்பிக்கை இல்லை. அதனால் சர்வதேசத்துடன் மட்டுமே பேசுவோம் என்று தேர்தல் பரப்புரையின் போது அழுத்தமாகத் தெரிவித்துள்ளேன். இவ்வாறு இருக்கும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசமுடியாது என்று அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தற்போது கூறுவது வேடிக்கையாக உள்ளது என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசுடன் பேசி எந்தப் பயனும் இல்லை என்பது எமக்குத் தெரியும் அதனால்தான் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் பரப்புரையின் போது இனப்பிரச்சினைகள் தொடர்பான பல விடயங்களை மக்களுக்குத் தெளிவாகக் கூறியிருந்தோம் அதில் மிக முக்கியமான ஒன்று தமிழ் மக்களின் உரிமை சார்ந்த பிரச்சினைகளை இலங்கை அரசுடன் பேசிப் பயன் இல்லை சர்வதேசத்துடன் மடடுமே பேசித்தீர்வு காண முடியும். ஏனெனில் இலங்கையில் ஆட்சிக்கு வரும் எந்த அரசுத் தரப்பினரும் தமிழர் உரிமை சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வராமல் காலத்தை இழுத்தப்புச் செய்து வருகிறார்கள். அவர்களது இவ்வாறான செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடைவெளியை உருவாக்கி தமிழ் மக்களின் பிரதிநிதிகளில் மக்களை நம்பிக்கை இழக்கச் செய்வதாகும். இந்தச் செயற்பாடுகள் இனி நடக்கப் போவதில்லை. எமது மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுக்காக நாங்கள் சர்வதேசத்துடன் பேசுவோம் ஏனெனில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு சர்வதேசத்துக்கு உள்ளது. இலங்கை அரசானது ஐ.நா சபையில் இருந்து வெளியேறியமை, தமிழ் மக்களுக்கான தீர்வைத் தர முடியாது என்று அரச தலைவரே கூறியமை போன்ற பல விடயங்களை சர்வதேச சமூகத்திற்கு ஆதாரமாக நிரூபித்து இலங்கை அரசின் மீது நம்பிக்கை இல்லை என்பதைக் கூறி சர்வதேசத்தின் ஆதரவுடன் எமது மக்களுக்கான நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுப்போம். ஆகவே தேர்தல் பரப்புரையின் போது கூறியதை மீண்டும் கூறுகிறோம். தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசுடன் பேச முடியாது. சர்வதேசத்துடன் மட்டுமே பேசி இனப்பிரச்சினைக்கான தீர்வை வென்றெடுப்போம்-என்றார்.

(ப-213)

### நாடாளுமன்ற முதல் அமர்வில்

# மரண தண்டனை கைதி?

கொழும்பு, ஓக.13

மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டு, வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சொக்கா மல்லி எனப்படும் பிரேமலால் ஜயசேகர, 20 திகதி ஆரம்பமாகவுள்ள நாடாளுமன்ற முதல் அமர்வில் கலந்துகொள்வதற்கான அனுமதியைக் கோரியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலைகள் அதிகாரிகளிடம் விடுக்கப்பட்டுள்ள இந்த கோரிக்கை, சிறைச்சாலைகள் தலைமையகத்தால், நீதிமன்ற அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் நீதிமன்ற அமைச்சின் அனுமதிக்கு அமைய, பிரேமலால் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு வருகை தரலாம் என்றும் நம்பப்படுகின்றது.

நடைபெற்ற பொதுத்தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட பிரேமலால் ஜயசேகர, 142,037 வாக்குகளைப் பெற்று மாவட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பிடித்தார்.

(ப)

# உயர்தர பரீட்சை: நேர அட்டவணை வெளியீடு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. இவ் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள், நவம்பர் மாதம் 6ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. அதற்கமைய உயர்தர புதிய, பழைய பாடத்திட்ட பரீட்சைகளுக்கான நேர அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. பரீட்சைக்கான அட்டவணைகளை கல்வித் திணைக்களத்தின் இணையத்தளமான www.doenets.lk என்ற இணையத்தில் பார்வையிட முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

# ஐ.தே.க. உறுப்பினர்கள்

### 60 பேருக்கு அவசர அழைப்பு

கொழும்பு, ஓக.13

கொழும்பு மாநகரசபை மேயர் ரோசி சேனாநாயக்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதற்காக கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவுக்கு எதிர்வரும் 19ஆம் திகதி வருமாறு அந்த உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என மாநகரசபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கலந்துரையாடலில் 60 உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ், மாநகரசபை மேயர் உள்ளிட்ட மாநகரசபை உறுப்பினர்கள் சிலரை நீக்க வேண்டும் என, உறுப்பினர்கள் சிலர் கட்சித் தலைமையிடம் வலியுறுத்த உள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் அந்தக் குழுவினரால் ரோசி சேனாநாயக்கவை நீக்கிவிட்டு அவருக்கு அடுத்த இடத்தில் உள்ள நபரை மாநகரசபை மேயராக நியமிக்க வேண்டும் என யோசனை முன்வைக்கப்படவுள்ளது என்றும், மற்றுமொரு தரப்பினர் மற்றுமொருவரை நியமிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. 2018ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி கொழும்பு மாநகரசபை மேயராக ரோசி சேனாநாயக்க நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

# சர்வதேச அரங்கில் ராணுவத்தை தண்டிக்க இடமளிக்க மாட்டோம்

## ரியர் அட்மிரல் சரத் வீரசேகர இறுமாப்பு

கொழும்பு, ஓக. 13



**இராணுவத்தைத் தண்டிக்க முயற்சித்த ஆட்சியை வீழ்த்தி, இராணுவத்தையும், சிங்கள பௌத்த கொள்கையையும் பாதுகாக்கும் அரசாங்கத்தை உருவாக்கியுள்ளோம். எக் காரணம் கொண்டும் இராணுவத்தை சர்வதேச அரங்கில் தண்டிக்க இடமளிக்கமாட்டோம் என்று பொதுஜன முன்னணியின் உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இறுதிப் போரில் நாம் செய்யாத குற்றமொன்றைச் செய்ததாகக் கூறி முன்னைய நல்லாட்சியாளர்கள் ஜெனிவாவில் பொய்யான சாட்சியங்களைக் கொடுத்தனர். அதனை எம்மால் ஒருபோதும் ஏற்றுகொள்ள முடியாது. அவ்வாறான சூழ்நிலையில் நான் எந்தவித அரசியல் பின்னணியும், தூண்டுதலும் இல்லாது சுயமாக ஜெனிவாவில் எமது இராணுவத்தை நியாயப் படுத்திப் பேசினேன். தொடர்ச்சியான எனது முயற்சியை நான் முன்னெடுத்துக்கொண்டே இருந்தேன். எனினும் மங்கள சமரவீர போன்றவர்கள் செய்த அநியாயத்தின் மூலமாக கடந்த காலங்களில் அளவுக்கு அதிகமான சர்வதேச அழுத்தங்களும் புலம்பெயர் புலி அமைப்புகளின் தலையீடுகளும் ஏற்பட்டன. ஜெனிவா பிரேரணை கோரிக்கைகளைச் செய்ய வேண்டும் என்ற எந்தவொரு கட்டாயமும் எந்தவொரு நாட்டுக்கும் இல்லை. ஆனால் நல்லாட்சி அரசாங்கம் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கியதன் மூலமாக வலுக்கட்டாயமான தலையீடுகள் ஏற்பட்டன. எமது இராணுவத்தை சர்வதேச அரங்கில் தண்டிக்கும் நிலைமைக்கு கொண்டு சென்றனர். அவர்களின் ஆட்சி தொடர்ந்திருந்தால் இன்று எமது இராணுவத்தினர் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்க முடியாது.

இராணுவத்தைக் கைதுசெய்து சிறையில் அடைக்கும் நிலைமையே உருவாகியிருக்கும். சர்வதேச ஆய்வாளர்கள் அறுவர் இலங்கையை நியாயப்படுத்திய போதும் கூட மங்கள சரமவீர மற்றும் நல்லாட்சி உறுப்பினர்கள் நாம் குற்றவாளிகள் என ஜெனிவாவில் கூறினர். அவற்றையெல்லாம் அங்கிருந்தே நான் பார்த்தேன். விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளுடன் சமாதான உடன்படிக்கை செய்து நாட்டில் இராணுவத்தின் கரங்களைக் கட்டிப்போட்டுவிட்டு விடுதலைப் புலிகளையும், கடல் புலிகளையும் சுதந்திரமாகச் செயற்பட வைத்தவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனும் அதே புலிப் புராணத்தையே பாட ஆரம்பித்தனர். அதுதான் உண்மை. இவற்றையெல் லாம் மனதில் வைத்துக்கொண்டே நாம் மக்களை ஒன்றிணைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தோம். சிங்கள, பௌத்த நாட்டில் பௌத்த சிங்களத்தை அழிப்பதை எம்மால் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. இன்று நாம் ஆட்சிக்கு வந்துள்ளோம், அதிகாரங்கள் எமக்கு கிடைத்துள்ளன. இப்போது நம் நாட்டின் சிங்கள பௌத்த கொள்கையைப் பாதுகாப்போம். அதே போல் எமது இராணுவத்தைப் பாதுகாக்கும் சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம் - என்றார். (ப)

# கண்டிய மன்னன் நீதி வழங்கிய இடத்தில் அமைச்சுப் பதவிகள்!

கொழும்பு, ஓக.13

கண்டி இராச்சியத்தின் மன்னன் நீதி வழங்கும் இடமான தலதாமாளிகையின் மகுல் மடுவ மண்டபத்திலேயே நேற்று அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய அமைச்சரவை நேற்று பதவியேற்ற தலதா மாளிகையின் மகுல் மடுவ மண்டபம் இலங்கை வரலாற்றில் சிறப்புமிக்க ஓர் இடமாகும். கண்டிய இராசதானியில் மன்னர், அமைச்சர்களைச் சந்தித்துப் பேசும் இடம் இதுவாகும். அத்துடன், இந்த மண்டபத்திலிருந்தே இராச்சிய நிர்வாகத்தை மன்னர் இராஜசிங்கன் மேற்கொண்டார். அத்துடன், மன்னர் நீதி வழங்கும் இடமாகவும் இந்த மண்டபமே செயற்பட்டது. இந்த மண்டபத்தின் மரக் கட்டமைப்பை 1783 ஆம் ஆண்டில் மன்னர் ராஜாதி ராஜசிங்கன் தனது ஆட்சிக்காலத்தில் தொடங்கினார். ஆனால் அவரது ஆட்சிக்குள்ளேயே அதை முடிக்க முடியவில்லை. இலங்கையின் இறுதி மன்னனான கண்டிய அரசன் கண்டிய இராச்சியத்தை 1815 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் சிம்மாசனத்திடம் ஒப்படைத்தான். அந்த ஒப்பந்தம் இந்த மண்டபத்திலேயே இடம்பெற்றது. (ப)



# பாற்சோறு வழங்கி மகிழ்ந்த மொட்டின் ஆதரவாளர்கள்

கிளிநொச்சி, ஓக.13

பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களால் நேற்று கிளிநொச்சியில் பாற்சோறு வழங்கப்பட்டது.


நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எட்டியது. அலரிமாளிகையில் நேற்று அமைச்சக்களும் வழங்கப்பட்டன.

அமைச்சுப் பதவிகள் பொறுப்பேற்பு நிகழ்வை அடுத்து கிளிநொச்சி பொதுஜன பெரமுன கட்சியினரால் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில், கிளிநொச்சி ஏ9 வீதியில் பாற்சோறு பரிமாறப்பட்டது. பட்டாசுகளும் வெடிக்க வைக்கப்பட்டன. (ப-6)

# கூட்டமைப்புடன் அரசு பேசவேண்டியதில்லை

## தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 13



தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேசுவதற்கான எந்தத் தேவையும் அரசுக்குக் கிடையாது.

எங்களுடன் இணைந்துள்ள தமிழ்ப் பிரதிநிதிகளுடனேயே நாங்கள் அது குறித்து பேசுவோம் என ராஜபக்ஷ அரசின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் நாங்களே, நாங்கள் மட்டுமே தமிழ் மக்களுக்கு இருக்கின்றோம் எனக் கூறிக்கொண்டு பிரிவினை வாதம் பேசிக் கொண்டிருந்த கூட்டமைப்பினரைத் தமிழ் மக்களே நிராகரிக்கும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது. அவர்களின் வாக்கு வீதத்திலும் சரிவு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையில் நாங்கள் மட்டுமே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என அவர்களால் கூறிக் கொண்டிருக்க முடியாது. இதனால் அவர்களுடன் எங்களுக்குப் பேச வேண்டிய எந்தத் தேவையும் கிடையாது. தற்போது அரசில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இருக்கின்றனர். அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்க நடவடிக்கை எடுப்போம். முதலில் தமிழ் மக்களுக்கு அபிவிருத்தியே முக்கியம். அதனைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கின்றோம் - என்றார். (ப)

# இந்திய - இலங்கை உறவை முன்கொண்டு செல்லத் தயார்

## பிரதமர் மஹிந்த கூறுகிறார்

இந்தியா - இலங்கைக்கு இடையில் உள்ள இருதரப்பு உறவுகளை முன்கொண்டு செல்வதற்கும், புரிந்துணர்வு நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கும் எதிர்பார்ப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"நான் எப்போதும் கூறுவதைப் போன்று இந்தியா எமது நட்பு நாடு. அதேபோன்று உறவு நாடு. பிரதமர் நரேந்திர மோடியினால் வழங்கப்பட்ட வாழ்த்துக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர் தான் எனக்கு முதன் முதலில் வாழ்த்துத் தெரிவித்த உலகத் தலைவர்" என மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ப)

# வேட்பாளர்களின் பெயர்கள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு?


## சொத்து விவரங்களை அறிவிக்கவில்லை என்கிறது பவ்ரல்

கொழும்பு, ஓக.13


பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த வேட்பாளர்களில், இதுவரை தமது சொத்து விவரங்களை அறிவிக்காத வேட்பாளர்களின் பெயர்களை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தலில் களமிறங்கிய வேட்பாளர்கள், வேட்புமனு தாக்கல் செய்து முதல் மூன்று மாதங்களுக்கு தமது சொத்து விவரங்களைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் பதவியேற்பதற்கு முன் தமது சொத்து விவரங்கள் அடங்கிய அறிக்கைகளைத் தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. வேட்புமனு தாக்கல் செய்து தற்போது சுமார் ஐந்து மாதங்கள் நிறைவடைந்துள்ள என என பவ்ரல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் ஏழாயிரத்து 452 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்த நிலையில், அவர்களில் பெரும்பாலானவர்கள் இதுவரை தமது சொத்து விவரங்களை வெளிப்படுத்தவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, சொத்து விவரங்களை அறிவிக்காதவர்களின் பெயர்ப் பட்டியலைக் கோரி, தகவல் அறியும் சட்டத்தின் கீழ், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றை அனுப்பியுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார். அதற்கு பதில் கிடைத்தவுடன் அது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ப)







நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் 19ஆம் திருவிழாவான நேற்றுக் காலை சூர்யோற்சவம் நடைபெற்றது. காலை 6.45 மணியளவில் நடைபெற்ற வசந்தமண்டப பூஜையை அடுத்து ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் எழுந்தருளிய சூரியபகவான் உள் வீதியுலா வந்து, தொடர்ந்து வெளி வீதியுலாவும் வந்தார். (ஐ)

## சிறப்புச் சொற்பொழிவு

சிறுப்பிட்டி, ஓக.13

யாழ்ப்பாணம் நீர்வேலி சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு தினமும் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்று வருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான அலங்காரத் திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றுவருகிறது.

அதன்படி இன்று வியாழக்கிழமை சிவநெறிச்செம்மல் இளம்சைவப்புலவர் ச.நவநீதன் " அறம் செய்ய விரும்பு" என்னும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## உர விநியோகத்துக்கு 'டோக்கன்கள்' வழங்கல்

சாவகச்சேரி,ஓக. 13

நாவற்குழி கிழக்கு கமக்காரர் அமைப்புக்கு உட்பட்ட பகுதியில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானிய உர வகைகள் விநியோக "டோக்கன்' வழங்கப்படவுள்ளன.

நாளை 14 ஆம் திகதி மற்றும் 19 ஆம் திகதிகளில் முற்பகல் 9.30 மணிக்கு பல நோக்கு மண்டபத்தில் இந்த டோக்கன்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைப்பின் அங்கத்தவர்கள் தமது ஆவணங்களுடன் வருகை தருமாறு அதன் தலைவர் அறிவித்துள்ளார். (ஐ)



நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆலய 19ஆம் நாள் திருவிழா நேற்று மாலை இடம்பெற்றது. முருகன் வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.









# செஞ்சோலைப் படுகொலையின் 14ஆம் ஆண்டு நினைவு நாளை

## நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு

முல்லைத்தீவு, ஓக. 13

முல்லைத்தீவு செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது இலங்கை வான்படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 61 மாணவிகளின் 14 ஆம் ஆண்டு நினைவு தினம் நாளை 14ஆம் திகதி நடைபெற உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையொட்டிய நிகழ்வுகள், செஞ்சோலை நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில், புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் இடைக்காட்டுச் சந்தியில் நாளை வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணியளவில் நடைபெற உள்ளன என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2006ஆம் ஆண்டு காலை 6 மணியளவில் இலங்கை வான்படையின் இரண்டு கிபிர் போர் விமானங்கள் செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது குண்டுத் தாக்குதலை நடத்தின. இதன்போது 61 மாணவிகள் கொல்லப்பட்டனர். 100க்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயமடைந்திருந்தனர். அன்று இந்தச் சம்பவம் தமிழர் தாயகம், புலம்பெயர் தேசம் எங்கும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தது. போரினால் பெற்றோரை, பாதுகாவலரை இழந்த பெண் பிள்ளைகளின் பராமரிப்புக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் 1991ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 23ஆம் திகதி செஞ்சோலை சிறுவர் இல்லம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிலையில் செஞ்சோலை மாணவிகள் முல்லைத்தீவு வள்ளிபுனத்தில் தற்காப்பு பயிற்சியில் ஈடுபட்டிருந்தமையை அறிந்த இலங்கை அரசபடைகள் 2006 ஆம் ஆண்டு காலை 6 மணியளவில் கிபிர் போர் விமானங்களில் இருந்து மிலேச்சத்த னமாக தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதல் விடுதலைப் புலிகளின் போர் பயிற்சியில் ஈடுபட்டோர் மீதே நடத்தப்பட்டது என இலங்கை அரசு அப்போது உலக நாடுகளுக்கு தெரிவித்திருந்தது. எனினும் மாணவிகள் தற்காப்புப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போதே விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது என சர்வதேச கண்காணிப்பாளர்களும் தொண்டு நிறு வனங்களின் அதிகாரிகளும் தெரிவித்திருந்தனர். (ப-213)

# மரண அறிவித்தல்

## விசுவலிங்கம் பிரான்சிஸ் மகேந்திரராஜா

(உரிமையாளர், ரானியா புடைவையகம், மானிப்பாய், முன்னாள் வலிகாம உதைப்பந்தாட்ட லீக்கின் உபதலைவர்)



அன்னை மடியில் 10.04.1959 — ஆண்டவன் அடியில் 12.08.2020

கட்டுவனைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் பிரான்சிஸ் மகேந்திரராஜா நேற்று (12.08.2020) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், பற்றிக் - எலிசபெத் தம்பதியரின் அன்பு மருமகனும், மாலாவின் பாசமிகு கணவரும், ரானியா **(LLB)**, யூலியன் ஆகியோரின் அன்புத் தந்தையும், **Captain.** பிரியந்த டி சில்வா (இலங்கை இராணுவ படைப்பிரிவு) என்பவரின் மாமனாரும், மல்லிகாதேவி, அன்னலக்சுமி, சிறீஸ்கந்தராஜா, புஸ்பராணி, சந்திரகுலராஜா, காலஞ்சென்ற மதிவதனராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க வழிபாடு அவரது இல்லத்தில் இன்று (13.08.2020) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 க்கு நடைபெற்று மானிப்பாய், பிப்பிலியில் உள்ள அமெரிக்கன் சிலோன் திருச்சபை **(CACM)** கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.99, யாழ்வீதி,
மானிப்பாய்

தகவல்:
குடும்பத்தினர்.

# நெஞ்சை விட்டு அகலா

## 4 ஆம் வருட நினைவஞ்சலி

## செல்வி துவாரகா சண்முகராஜகுருக்கள்





மலர்வு 22.12.2000 — உதிர்வு 13.08.2016

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்துப் பக்குவமாய் வழிநடந்த
இரக்கத்தின் இருப்பிடமாய் எல்லோர்க்கும் நல்லதாய்
எல்லோர் மனதிலும் இருந்த எம் துவாரகா
ஏனோ! இறைவன் இடை நடுவில் பறித்துவிட்டான்

ஓடி மறைந்ததம்மா நான்கு ஆண்டுகள்
உன் நினைவுகள் ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் மறைந்திடுமா
பண்புள்ளோரைப் பலகாலம்
- வாழவிடக் கூடாதென்றா?
உம்மை ஆண்டவன் அழைத்தான்
என் செய்வோம் இறைவன் சித்தம் இது
இனிக் காணமுடியாத சோகநிலையோடு
எமது ஏகபுத்திரி துவாரகா
இங்கிருந்தே ஏங்கி அழுகின்றோம் - அம்மா!
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

திக்கரை, களபூமி,
காரைநகர்

குடும்பத்தினர்

# தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் தமிழ்க் கூட்டமைப்பினர்தான்

## மஹிந்த தரப்புக்கு பதிலடி கொடுக்கிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 13

**வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. தமிழ் மக்களும் அதனை மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் இல்லை என்று பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். அதேபோன்று மஹிந்த அணியிலுள்ள பலரும் இதே கருத்தை தெரிவித்திருந்தனர். பிரதமர் மஹிந்த ராஜபக்ச, கூட்டமைப்பின் கோட்டையான வடக்கு கிழக்கை கைப்பற்றி விட்டோம் என்று குறிப்பிட்டிருந்தார். இந்தக் கருத்துக்கள் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்ததாவது:

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் தலா மூவர் வீதம் 6 தமிழ்ப் பிரதிநிதித்துவத்தையும், திருகோணமலையில் ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தையும், மட்டக்களப்பில் 2 தமிழ்ப் பிரதிநிதித்துவத்தையும், அம்பாறையில் தேசியப்பட்டியல் மூலம் ஓர் பிரதிநிதித்துவத்தையும் நாம் பெற்றுள்ளோம். வடக்கு, கிழக்கிலிருந்து மொத்தமாக 10 தமிழ்ப் பிரதிநிதித்துவத்துடன் நாங்கள் நாடாளுமன்றம் செல்கின்றோம். ஆனால், சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் அதன் பங்காளிக் கட்சிகளும் வடக்கு, கிழக்கில் 11 பிரதிநிதிகளைப் பெற்றிருந்த போதிலும் அதில் 5 பேர்தான் தமிழ்ப் பிரதிநிதிகள். ஏனையவர்களில் நால்வர் சிங்களவர்கள்; இருவர் முஸ்லிம்கள்.

இந்தநிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோட்டையைத் தாம் கைப்பற்றி விட்டோம் எனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனிமேல் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் இல்லை எனவும், தமிழ் மக்களின் மனதைத் தாம் வென்று விட்டோம் எனவும் ஆளுந்தரப்பினர் தம்பட்டம் அடிக்கக்கூடாது.

கடந்த முறையைவிட 6 ஆசனங்கள் இம்முறை எமக்குக் குறைந்திருந்தாலும் நாம் பலத்துடன்தான் நாடாளுமன்றம் செல்கின்றோம். அங்கு எதிரணியில் இருக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சேர்த்து தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்போம்.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக சர்வதேச சமூகத்தினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையே ஏற்றுள்ளனர். தேர்தலுக்கு முன்பும் சரி, தேர்தலுக்குப் பின்பும் சரி தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேச பிரதிநிதிகள் எம்முடன்தான் தொடர்ந்து பேசிக்கோண்டிருக்கின்றார்கள். எனவே, தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும், அரசியல் தீர்வு விடயம் குறித்தும் ராஜபக்ஷ அரசு எம்முடன் பேசியே ஆக வேண்டும். தீர்வு விடயம் தொடர்பில் பேச்சுக்கள் தொடர்ந்தால் அரசுக்கு எம்மாலான அனைத்து ஒத்துழைப்புக்களையும் நாம் வழங்குவோம். அரச தரப்பினர் வீரவசனம் பேசிக்கொண்டிருக்காமல் தமிழ் மக்களின் நலன் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டும். தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கண்டால்தான் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும்-என்றார். (ஒ,5,22)

# வெடிக்காத நிலையில் பளையில் ஷெல் மீட்பு

கிளிநொச்சி, ஓக.13

பளை முல்லையடி பகுதியில் வெடிக்காத நிலையில் காணப்பட்ட ஷெல் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முல்லையடி பகுதியில் காணி துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்த காணி உரிமையாளர் தென்னை மரம் ஒன்றுக்கு அருகில் காணப்பட்ட ஷெல் ஒன்றை அடையாளம் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அதனை அடையாளப்படுத்தியதுடன் அனுமதி பெற்று அதனை மீட்டு செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (ரி1-6)



# ஹெரோய்ன் நுகர்ந்தனரென கீரிமலையில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 13

கீரிமலையில் ஹெரோய்ன் போதைப் பொருள் நுகர்ந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர். கைதான மூவரில் ஒருவர் அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையவர். மற்றைய இருவரும் இளவாலை மற்றும் தெல்லிப்பளை பகுதிகளைச் சேர்ந்த 21,19 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து 20 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. விசாரணைகளின் பின்னர் இருவரும் மல்லாகம் நீதிவானிடம் இன்று முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (கு-25)

# விபத்தில் காயப்பட்டவர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஓக. 13

திக்கம் புலவோடை பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் காயமடைந்த முதியவர் நேற்றுமுன்தினம் இரவு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார் என்று நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

ஊறணி வல்வெட்டித்துறை எஸ்.சுந்தரம் (வயது 70) என்பவரே உயிரிழந்தார்.

அவர் கடந்த 9ஆம் திகதி சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் ஒன்று அவரோடு மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது. தலையில் காயமடைந்த அவரை வீதியால் சென்றவர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்த்திருந்தனர்.

மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். சிகிச்சையின் பின்னர் மீண்டும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்தநிலையில் அவர் உயிரிழந்துள்ளார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. நெல்லியடி பொலிஸார் விசாரணை நடத்தினர். (கு-25)

பெறுகைகளுக்கான அழைப்பு

**மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார்.**

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கான வழங்கல்கள் / சேவைகள் - 2020/ 2021

1. மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குப் பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்காக தகுதியான. தகைமைவாய்ந்த வழங்கு நர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகள் கோரப்படு கின்றன.

| இல | விபரம் | பிணை வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. | வாயு சீராக்கி பராமரிப்பு சேவை செய்தல் NP/04/42/DGH/MN/02/05/2020/AC/01 | 65000.00 | 3500.00 |
| 2. | சிற்றுண்டிச்சாலை வாடகைக்கு வழங்கல் NP/04/42/DGH/MN/02/05/2020/CAN/02 | 30000.00 | 2500.00 |
| 3. | அழுக்குத்துணிகள் சலவை செய்தல் – அ. தொகுதி I NP/04/42/DGH/MN/02/05/2020/Laundry 1 | 50000.00 | 2500.00 |
| 4. | அழுக்குத்துணிகள் சலவை செய்தல் – அ. தொகுதி ii NP/04/42/DGH/MN/02/05/2020/Laundry ii | 100000.00 | 2500.00 |

2. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கிடைக்கும் விண்ணப்பப்படிவத்தை பெற்று பூர்த்திசெய்து கொடுத்து பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 13.08.2020 தொடக்கம் 02.09.2020 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக் கொள்வதுடன். 03.09.2020 ந் திகதி 10.00 மணிக்கு முன்பாக பெறுகை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

3. மேலதிக விபரங்களினையும். விலைக்கேள்வி பத்திரங்களையும் மாவட்ட பொது வைத்தியசாலை. மன்னார் (தொலைபேசி இல. 023-2222261) என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திய கலாநிதி க. செந்தூர்பதிராஜா,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார்.**

# இன்றைய நாள்

**மேடம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள். சகோதரர்களுடன் ஒற்றுமை பிறக்கும். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த பொருள் வாங்குவீர்கள். மனைவியின் ஆதரவு பெருகும்.

**இடபம்:** உதவிகள் கிடைக்கும் நாள். வேலைப்பளு குறையும். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். விழிப்புடன் செயல்பட வேண்டும். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** நினைத்தது நிறைவேறும் நாள். கலைஞர்களுக்குப் புதிய சிந்தனைகள் தோன்றும். பிள்ளைகள் பொறுப்பு டன் செயல்படுவார்கள். சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**கடகம்:** மனநிம்மதி பெறும் நாள். பணியிடத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். எதிர்பாராத ஒரு வேலை முடியும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் நீங்கும். நண்பர்களின் உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** பிரச்சினைகள் தீரும் நாள். எதிர்பார்த்தவைகளில் சில தள்ளி போனாலும் புதிய முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் புதிய தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**கன்னி:** சில விஷயங்கள் திட்டமிட்டபடி நடக்கமாட்டா. யாரிடமும் கோபத்தை காட்டாதீர்கள். பிறரிடம் கைமாற்றாக வாங்க வேண்டி வரும். யாரையும் நம்பிப் பணம் கொடுக்க வேண்டாம்.

**துலாம்:** தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள். சிக்கலான வேலைகளைக் கையில் எடுத்துக் கொள்ள வேண்டாம். சிறு அவமானம் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** முயற்சியால் முன்னேறும் நாள். பேச்சில் முதிர்ச்சி இருக்கும். கணவன் மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு தள்ளிப்போகும்.

**தனுசு:** மகிழ்ச்சியான நாள். வாய்ப்புக்கு காத்திருந்தவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. சகோதர வகையில் இருந்து வந்த மனத்தாங்கல் நீங்கும். குழந்தைப் பேறு மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** அமைதியான நாள். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். கலைஞர்கள் பாராட்டுப்பெறுவீர்கள்.

**கும்பம்:** இனிமையான நாள். திடீர்ப் பணவரவு உண்டு. வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் மகிழ்ச்சி அளிக்கும் செலவுகள் கூடும்.

**மீனம்:** கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். வியாபாரத்தில் வேலையாள்கள் திருப்தி அடைவார்கள். குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

## அங்கொட லொக்கா குழுவினருக்கு சட்டவிரோத காணிகள்

கொழும்பு, ஓக.13

பாதாள உலகக் குழுத் தலைவன் அங்கொட லொக்காவின் குழுவினருக்குச் சொந்தமாக மேல் மாகாணத்துக்குள் மட்டும் 928 பேர்ச்சஸ் காணிகள் இருக்கின்றமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பலாத்காரமாகவும், போலி உறுதிகள் ஊடாகவும் அக் குழு இந்தக் காணிகளைக் கைப்பற்றியுள்ளன என நம்பப்படும் நிலையில், அது தொடர்பில் மேல் மாகாணத்தின் தெற்கு குற்றத் தடுப்புப்பிரிவு ஊடாக விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதுவரையில் அங்கொட லொக்கா தொடர்பிலான விசாரணைகளில், அவரது குழு சட்டவிரோதமாக கைப்பற்றிக்கொண்டுள்ள 928 பேர்ச்சஸ் காணிகள் தொடர்பில் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் சட்டவிரோத மணல் அகழ்வுகளையும் முன்னெடுத்துள்ளார். அங்கொட லொக்கா சட்டவிரோத செயற்பாடுகள் ஊடாக சுமார் 50 இலட்சம் ரூபா வரை பணம், சொத்துக்களைச் சேர்த்துள்ளார் என கண்டறியப்பட்டுள்ளது. அது தொடர்பில் கறுப்புப் பண சுத்திகரிப்பு சட்டத்தின் கீழ் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அங்கொட லொக்காவின் குழுவினரால் எவரது காணியேனும் பலாத்காரமாகவோ அல்லது போலி உறுதிகள் ஊடாகவோ கைப்பற்றப்பட்டிருக்குமானால் அவர்கள் மேல் மாகாண தெற்கு குற்றத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளரிடம் முறையிட முடியும் எனத் தெரிவித்துள்ளார். (ரி3)

## பிரதமரின் புதிய செயலாளர் கடமைகளைப் பொறுப்பேற்றார்



கொழும்பு, ஓக. 13

பிரதமரின் புதிய செயலாளர் காமினி செனரத் நேற்றுமுன்தினம் முற்பகல் அலரிமாளிகையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். மஹிந்த ராஜபக் ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த போது காமினி சேதர செனரத், அவரது கூடுதல் செயலாளராகவும், தலைமை அதிகாரியாகவும் கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் 2015 வரை பணியாற்றினார். இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரிகளில் ஒருவரான செனரத், களனி பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவராவார். இலங்கை நிர்வாக சேவையில் உதவி பிரதேச செயலாளராக இணைந்த அவர், குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் மற்றும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் பதவிகளையும் வகித்துள்ளார். மேலும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், லிட்ரோ எரிவாயு நிறுவனம் மற்றும் மக்கள் வங்கி ஆகிய நிறுவனங்களின் தலைவர் பதவிகளையும் செனரத் வகித்துள்ளார். (ஐ)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை வெள்ளி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா மாவட்டத்தில்** புளிதறித்தபுளியங்குளம் கிராமம், செட்டிகுளம் கிராமம், பம்பைமடுவிலிருந்து குருக்கள் புதுக்குளம் வரை, புவரசங்குளத்திலிருந்து செங்கற்படை, வேளாங்குளம் கடற்படை முகாம், பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், ஆண்டியப்புளியங்குளம், கற்கடந்தகுளம், மதவுவைத்தகுளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி: விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம், பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் வருடாந்தம் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தி வருகின்றது. இந்த ஆண்டும் இச் சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பத்தைக் கோரியுள்ளது. ஆண்கள் ஏ, பி பிரிவு மற்றும் பெண்கள் பிரிவு என இப்போட்டிகளை நடத்தத் தீர்மானித்துள்ளது. ஆர்வமுடைய கழகங்கள் எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை செயலாளர், வாகீசன், கலைமதி வீதி புத்தூர் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், பதிவு செய்யப்படாத மற்றும் நீண்ட காலம் செயற்படாத கழகங்கள் உடனடியாக தலைவர், செயலாளர்களின் (773870889, 779050 284) தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ரி2-422)

## ஹெரோய்ன் வைத்திருந்தவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் ஹெரோய்ன் போதைப் பொருள்களைத் தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, சுன்னாகம் பகுதியில் ஒன்றரை மில்லி லீற்றர் கசிப்புடன் மேலும் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி2-159)

## இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்கில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம்(Zoom) செயலிவாயிலாக 20 நாள்களுக்கு இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன. இதன் பதினான்காவது நாளாகிய இன்று வியாழக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பேராசிரியர் வ.மகேஸ்வரன் "இலங்கை கோவிற்கலைகள்" என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார். இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் என தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

Zoom meeting ID : 477 159 8996

pass word : wts

# புதிய அமைச்சரவை விவரம்


01. கோத்தாபய ராஜபக்ஷ
பாதுகாப்பு அமைச்சு


02. மஹிந்த ராஜபக்ஷ
நிதி அமைச்சு, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு


03. நிமல் சிறிபால டி சில்வா
தொழில்துறை அமைச்சு


04. ஜி.எல்.பீரிஸ்
கல்வி அமைச்சு


05. பவித்திரா வன்னியாராச்சி
சுகாதார அமைச்சு


06. தினேஷ் குணவர்த்தன
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு


07. டக்ளஸ் தேவானந்தா
கடற்றொழில்துறை அமைச்சு


08. காமினி லொக்குகே
போக்குவரத்து அமைச்சு


09. பந்துல குணவர்த்தன
வர்த்தகத்துறை அமைச்சு


10. ஆர்.எம்.சி.பி. ரத்னாயக்க
வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு


11. ஜனக பண்டார தென்னக்கோன்
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு


12. கெஹலிய ரம்புக்வெல்லை
வெகுசன ஊடக அமைச்சு


13. சமல் ராஜபக்ஷ
நீர்ப்பாசனத்துறை அமைச்சு


14. டலஸ் அழகப்பெரும
மின்சக்தித்துறை அமைச்சு


15. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ
நெடுஞ்சாலைகள்துறை அமைச்சு


16. விமல் வீரவன்ஸ
கைத்தொழில்துறை அமைச்சு


17. மஹிந்த அமரவீர
சுற்றாடல்துறை அமைச்சு


18. எஸ்.எம்.சந்திரசேன
காணி அமைச்சு


19. மஹிந்தானந்த அளுத்கமகே
கமத்தொழில் துறை அமைச்சு


20. வாசுதேவ நாணயக்கார
நீர்வழங்கல்துறை அமைச்சு


21. உதய கம்மன்பில
வலுச் சக்தித்துறை அமைச்சு


22. ரமேஷ் பத்திரன
பெருந்தோட்டத்துறை அமைச்சு


23. பிரசன்ன ரணதுங்க
சுற்றுலாத்துறை அமைச்சு


24. ரோஹித அபேகுணவர்தன
துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு


25. நாமல் ராஜபக்ஷ
இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு


26. அலி சப்ரி
நீதித் துறை அமைச்சு

# இராஜாங்க அமைச்சர்கள்

**சமல் ராஜபக்ஷ**
உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம்

**பிரியங்கர ஜயரத்ன**
வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல்

**துமிந்த திஸாநாயக்க**
சூரிய சக்தி காற்று மற்றும் நீர் மின்சார உற்பத்தி கருத் திட்ட அபிவிருத்தி

**தயாசிறி ஜயசேக்கர**
பத்திக் கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி

**நிமல் லன்சா**
கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள்

**ரொஷான் ரணசிங்க**
காணி முகாமைத்துவ அலுவல்கள், அரச வியாபார காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி

**சுதர்ஷனி பெர்னான்டோபுள்ளே**
சிறைச்சாலைகள் மறுசீரமைச்சு மற்றும் சிறைக் கைதி கள் புனர்வாழ்வளிப்பு.

**அருந்திக்க பெர்னான்டோ**
தென்னை, கித்துள், பனை மற்றும் இறப்பர் செய்கை கள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த பொறிமுறை பண்டங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்ப டுத்தல்.

**லசந்த அழகியவன்ன**
கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவி ருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு

**ஜயந்த சமரவீர**
களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல், வசதிகள் மற்றும் இயந்திரப் படகுகள், கப்பற்றொழில் அபிவிருத்தி

**கனக ஹேரத்**
கம்பனி தோட்டங்களை மறுசீரமைத்தல், தேயிலை தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலை தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை ஏற்றுமதி மேம்பாடு

**விதுர விக்ரமநாயக்க**
தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள்

**ஜானக்க வக்கும்பர**
கரும்பு, சோளம், மர முந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு.

**விஜித பேருகொட**
அறநெறிப் பாடசாலைகள், பிக்கு கல்வி, பிரி வெனா மற்றும் பௌத்த பல்கலைக்கழகங்கள்

**ஷெஹான் சேமசிங்க**
சமுர்த்தி, மனைப் பொருளாதார, நுண்நிதி, சுய தொழில், தொழில் அபிவிருத்தி மற்றும் கீழ் உழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி

**மொஹான் டி சில்வா**
பசளை உற்பத்தி மற்றும் விநியோகங்கள், இரசா யன பசளைகள் மற்றும் கிருமிநாசினி பயன்பாடு ஒழுங்கு
படுத்தல்.

**லொஹான் ரத்வத்த**
இரத்தினக்கல், மற்றும் தங்க ஆபரணங்கள் சார் கைத்தொழில்கள்.

**திலும் அமுனுகம**
வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்து சேவைகள், ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில்

**விமலவீர திசாநாயக்க**
வன ஜீவராசிகள் பாதுகாப்பு, யானைவேலிகள் மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள், காடுகளை மீண் டும் வளர்த்தல் மற்றும் வன வளங்களின் அபி விருத்தி

**தாரக்க பாலசூரிய**
பிராந்திய உறவுகள் அலுவல்கள்

**இந்திக்க அனுருத்த**
கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாடு

**கஞ்சன விஜேசேகர**
அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால் வளர்ப்பு, கடற்றொழில், துறைமுகங்கள் அபிவி ருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி

**சனத் நிஷாந்த**
கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் நீர் வழங்கல் கருத் திட்ட அபிவிருத்தி

**சிறிபால கம்லத்**
மகாவலி வலயங்கள் சார்ந்த அகழிகள், வாய்க்கால்கள் மற்றும் வாழ்விடங்கள் பொதுகட்ட மைப்பு வசதிகள் அபிவிருத்தி.

**சரத் வீரசேகர**
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள்.

**அனுராத ஜயரத்ன**
கிராமிய வயல் சார்ந்த குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி

**சதாசிவம் வியாழேந்திரன்**
தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடகவியலா ளர்கள் தொழில் அபிவிருத்தி

**தேனுக விதானகமகே**
கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்ட மைப்பு வசதிகள் மேம்பாடு

**சிசிர ஜயகொடி**
சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர் வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதாரம்.

**பியல் நிஷாந்த டி சில்வா**
மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி பாடசாலைகள் உட்கட்ட மைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள்.

**டி.பி. ஹேரத்**
கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு பால் மற்றும் முட்டை சார்ந்த தொழில்கள்.

**பிரசன்ன ரணவீர**
பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப் பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம் பாடு

**டி.பி.சானக்க**
விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி

**ஜீவன் தொண்டமான்**
தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள்

**ஷஷீந்திர ராஜபக்ஷ**
நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவு கள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங் காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம் பாடு மற்றும் விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப கமத் தொழில்.

**நாலக்க கொடஹேவா**
நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழி வுப்பொருள் அகற்றல் மற்றும் சமுதாய தூய்மைப் படுத்தல் அலுவல்கள்.

**அஜித் நிவாட் கப்ரால்**
நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு

**சீதா அரம்பேபொல**
திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல்.

**சன்ன ஜயசுமன**
மருந்தாக்கல், விநியோகம் மற்றும் ஒழுங்கு படுத்தல்.



## மரண அறிவித்தல்

# திருமதி நாகலட்சுமி வாமதாசன்

மண்ணில் 17.11.1952 — விண்ணில் 11.08.2020

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலட்சுமி வாமதாசன் கடந்த (11.08.2020) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை - பாக்கியலட்சுமி தம்பதிகளின் அருமை மருமகளும், வாமதாசனின் (JP - முன்னாள் மின்சாரசபை பணியாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சங்கரதாசன் மற்றும் முரளிதாசன் (ஆசிரியர் - வ/நெளுக்குளம் கலைமகள் மகா. வித்), திரியாம்பிகை (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வேலணை), ரூபதாசன் (வர்த்தகர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தணிகாசலம் மற்றும் காசிநாதன், துரைரட்ணம், மகேஸ்வரன் (சுவிஸ்), தேவராசா (முன்னாள் ப.நோ.கூ.ச.பணியாளர்), வசந்தராசா (கனடா), விஜயலட்சுமி (கனடா) ஆகியோரின் சகோதரியும், வல்லிபுரம் (பிரான்ஸ்), உருத்திராம்பாள், சிவகடாட்சம் (ஓய்வுநிலை தபாலக தரம்பிரிப்பாளர்-யாழ்ப்பாணம்), அம்பிகைபாலன் (ஓய்வுநிலை உத்தியோகத்தர்), திரிபுராம்பாள் (ஆசிரியர் - யா/ நாவாந்துறை றோ.க.வித்), ஜெகதாம்பாள் ஆகியோரின் மைத்துனியும், துசியாவின் அன்பு மாமியாரும், இராசேந்திரன் விஜயலட்சுமியின் சம்மந்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (13.08.2020) வியாழக்கிழமை காலை .08.00 மணிக்கு அவரது இல்லத்தில் கிரியைகள் இடம்பெற்று நயினாதீவு சல்லிபரவை இந்துமயானத்தில் அக்கினியுடன் சங்கமமாகும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஸ்ரீ அம்பிகை**
**பல்பொருள் வாணிபம்**
**நயினாதீவு - 03**

**தகவல் :**
**கோ. வாமதாசன்**
**( 077 669 1409) (VMS)**

## மரண அறிவித்தல்

# கலாபூஷணம் புலவர் A.W. அரியநாயகம் J.P.

**[ஆசிரியர் திருமலை புனித சூசையப்பர் கல்லூரி, திருமலை இந்துக்கல்லூரி, கொழும்பு தெற்கு மெதடிஸ் தமிழ் மகாவித்தியாலயம், தெஹிவளை கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி, பிரதி அதிபர் நெடுந்தீவு மகாவித்தியாலயம், முன்னாள் மூப்பர் கச்சைதீவு புனித அந்தோனியார் ஆலயம், முன்னாள் தலைவர் நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்]**


நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை வென்செஸ்லோஸ் அரியநாயகம் நேற்று (12.08.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சேவியர் அப்புத்துரை, அன்னமரியா முத்தம்மா ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற இஸ்ரெலா பராசக்தியின் (முன்னாள் முகாமையாளர் நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவு கிராமிய வங்கி) அன்புக்கணவரும், முருகேசு கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சுவேந்திரனி (USA), மனோஜ் (USA), நிஷாந்தினி (UK), விஜி (France) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜான்சி (USA), சதீஸ் (UK), ஸ்ரீதரன் (France) ஆகியோரின் மாமனும், தெய்வேந்திரம் மகேஷ்வரி (Canada), காலஞ்சென்றவர்களான புனிதமணி, சத்தியபால், அருந்ததி ஆகியோரின் சகோதரரும் காலஞ்செனற்வர்களான நாகநாதன் (ஓய்வு நிலை அதிபர்), மேரிப்பிள்ளை மேரி யோசப்பின், ஆறுமுகம் வைத்தியநாதன் (ஓய்வு நிலை அதிபர்), செல்லம்மா சிகாமணி, சோமசுந்தரம் (ஓய்வு நிலை அதிபர்), தெய்வானைப்பிள்ளை, வேலுப்பிள்ளை வள்ளியம்மை (புளியடி ஆச்சி), ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற பண்டிதர் ஆசிநாதர் (ஓய்வு நிலை பண்டிதர் பெனடிக்ட் மாஸ்டரின்) சகோதரியின் மகனும் நிமா (UK), காலஞ்சென்றவர்களான அரசி, இஸ்ரனி, மற்றும் விஜி (UK), சபா (Norway), காலஞ்சென்ற தர்ஷலிங்கம், ஸ்ரீபத்மநாதன், காலஞ்சென்ற சுவாமிநாதன், தனலட்சுமி, விஜயலட்சுமி, குணநாதன், காலஞ்சென்ற ஜெயநாதன், பாக்கியலட்சுமி, கலாவதி, மனோவதி, ஜெயவதி, புஸ்பவதி ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், மிஷாலினி, ஈலைஷா, எமி, ஜெயல், ஐசேயா, அப்சரா, ஆர்ணா ஆகியோரின் பேரனும், மடலின் ஆரியாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லமான இல.100.4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வைக்கப்பட்டு நல்லடக்கநிகழ்வு நாளை (14.08.2020) வெள்ளிக்கிழமை காலை 07.30 மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் காலை 11.30 மணிக்கு நெடுந்தீவு தேவானந்தா கலாசார மண்டபத்தில் நிகழும் இரங்கல் நிகழ்வின் பின் பிற்பகல் 01.30 மணியளவில் நெடுந்தீவு புனித பிரான்சிஸ்கு சவேரியார் தேவாலயத்தில் ஆத்மசாந்தி திருப்பலியின் பின் அவரின் பூதவுடல் கட்டராமன் சல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல் :**
**சபா நாகநாதன் : +479 2826 572, சுவேந்திரனி அரியநாயகம் : 1646 484 1326**
**நிஷாந்தினி : 4474 8383 0932, விஜி : 3365 192 1896,**
**சுபதா : 076 571 1120, ஆசாப் : 077 839 8661**



மலர்வு 29.09.1938 — உதிர்வு 12.08.2020

# யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

# மணிவிழா வாழ்த்தும் சேவை நயப்பும்



## அதிபர் உயர்திரு. கணபதிப்பிள்ளை

## மங்களேஸ்வரன்

## B.A (Hons), Dip.in.Edu, M.ed, S.L.P.S - 1

**சேவை விபரம்**

01. வ / பூவரசன்குளம் M.V ஆசிரியர் 26.12.1985 - 18.02.1990
02. வ/ சின்னடம்பன் G.T.M.S ஆசிரியர் 19.02.1990 - 15.07.1992
03. வ/ கனகராயன்குளம் M.V ஆசிரியர் 16.07.1992 - 31.12.1992
04. யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு M.V ஆசிரியர் 01.01.1993 - 01.01.1995
05. யா/ மீசாலை விக்னேஸ்வர M.V ஆசிரியர் 02.01.1995 - 09.02.2000
06 யா/ கச்சாய் G.T.M.S அதிபர் 10.02.2000 - 13.09.2001
07. யா/ வரணி M.V அதிபர் 14.09.2011 - 31.07.2016
08. கோட்டக்கல்வி அலுவலகம் சாவகச்சேரி 01.08.2016 - 13.08.2017
09. யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு C.C அதிபர் 14.08.2017 - இன்று வரை

### யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் பிரித்தானியா கிளை தலைவரின் வாழ்த்துச்செய்தி.



யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் அதிபர் க. மங்க ளேஸ்வரன் அவர்கள் தமது பணியிலிருந்து ஓய்வு பெறப்போகும் இ ந்நேரத்தில் வாழ்த்தி விடைகொடுப்பது எமது கடமையாகும். இவரது வாழ்க்கை பயணத்தில் கல்வித்தாயும் இன்றுவரை இவருடன் சேர்ந்தே பயணிக்கிறாள் எனில் மிகையாகாது.

கடந்த வருடம் பிரித்தானியாவில் நடைபெற்ற "கலாசார மாலை" நிகழ்வில் தாய்நாட்டிலிருந்து எமது அதிபர் அவர்களை இங்கு நிகழ்வின் தலைமை விருந்தினராக விழாவினை சிறப்பிப்பதற்காக எமது சங்கம் அனைத்து நடவடிக் கைகளையும் மேற்கொண்டு அந் நிகழ்வில் அதிபர் அவர்கள் கலந்து சிறப் பித்தமை அதிபருக்கும் எமது சங்கத்திற்கும் பெருமையே. இவரது கல்விக்கான தேடலில் பயணம் இப்பிரியாவிடை நிகழ்வோடு தரித்து விடப்போவதில்லை இது கல்விப் பயணத்தின் தடைக்கல்லும் இ ல்லை. இத்தனை காலங்கள் அயராது ஓய்வின்றி எம் சமுதாயத்திற்காக பணிபுரிந்த எமது அதிபர் அவர்களுக்கு கல்வித் தாய் வழங்கும் ஒரு சிறிய ஓய்வே ஆகும். பணிக்காக தம்மை அர்ப் பணித்தவர் இனி வரும் காலங்களில் அவரது வாழ்வில் எல்லா வளமும் பெற்று பூரண ஆரோக்கியத்துடன் நலமாக வாழவேண்டும் என எமது சங்கத்தின் சார்பாக வாழ்த்தி பிரியாவிடை கொடுக்கின்றாம்.

"வாழ்க வளமுடன்"

**திரு மயில்வாகனம் சிறிதாசன்**
**தலைவர். யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம். பிரித்தானியா கிளை.**

### மணிவிழா நாளில் மனதார வாழ்த்துகின்றோம்



மகத்தான பணிதனைச் செய்த மனநிறைவுடன் மணிவிழாக் காணும் எமது கல்லூரி அதிபர் அவர்கள் எளிமையான தோற்றமும். இனிமையான பேச்சும். ஆற்றல் மிக்க செயற்றிறனும் கொண்டு கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டவர் எப்போதும் இயலாது

என்ற சொல் சொல்லாத வித்தகர் சொல் லிலும் செயலிலும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து தன்னிகரில்லாப் பணி புரிந்த அதிபர் அவர்களின் உயர்ந்த உள்ளத்தின் வெளிப்பாடாகவே அவர் எமது இலண்டன் பழைய மாணவர் சங்கத்தின் "கலாசாரமாலை" நிகழ் விலும் கலந்து சிறப்பிக்க முடிந்தது. இத்தகைய வாண்மையும் மேன்மையும் கொண்ட அன்பிற்குரிய அதிபர் அவர்கள் ஓய்வுக்காலத்தில் நோய் நொடியின் றி நீண்ட ஆயுள் பெற்று குன்றொளிரும் தீபமெனக் குவலயத்தில் பேரோடும். புகழோடும். மகிழ்வோடும் வாழ்ந்திடவே வாழ்க. வாழ்க என்று வாழ்த்துகின்றோம்.

**திரு.ம.சசிகரன்**
**செயலாளர்**
**பழைய மாணவர் சங்கம் யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்தியகல்லூரி**

### ஆசிச் செய்தி "தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு காம் உறுவர் கற்று அறிந்தார்"



கற்றறிந்தவர் தாம் இன்பமடையக் காரணமாகிய கல்வியால். உலகத்தினரும் இன்பமடையும் சிறப்பைக்கருதி அக்கல்வியை மேலும் விரும்பி கற்பார் என்பது வள்ளுவன் வாக்கு. தாம் கற் பதோடு மட்டும் நின்றுவிடாது. கற்ற கல்வியை மற்றவர்களுக்கு போதிக்கும் மகத்தான பணி ஆசிரியப்பணி ஆகும்.

"மாதா. பிதா. குரு. தெய்வம்" என்ற வரிசையில் தெய்வத்திற்கும் முதன்மையாக போற் றப்படுபவர்கள் ஆசிரியர்கள். அதனாலன்றோ "எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவான்" என்று கூறுவார்கள். "ஆசிரியப்பணியே அறப்பணி அதற்கே உன்னை அர்பணி" என்ற வரிகளுக் கமைவாகாக பல்வேறு பாடசாலைகளில் ஆசிரியராகவும். அதிபராகவும் பணியாற்றி. 2017 முதல் இன்று வரை யா/கொடிகாமம் திருநாவுக்கரக மத்திய கல்லூரியில் தனது அதிபர் சேவையை வழங்கி ஓய்வுபெறும் திரு. கணபதிப்பிள்ளை மாங்களேஸ்வரன் அவர்களது சேவையை பாராட் டுவதோடு. அவர்கள் இன்றும் பல சேவையை கல்விச்சமூகத்துக்கு ஆற்றவேண்டும் என வாழ்த் தி அவர் எல்லா நலன்களும் பெற்று சிறப்பாக வாழ வேண்டும் என சிட்டிவேரம் கண்ணகை அம்பாளின் பாதார விந்தங்களை பணிந்து நல்லாசி கூறி அமை கின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

**சிவஸ்ரீ இ.குமாரசுவாமிக் குருக்கள்**
**ஸ்ரீ சக்தி கிரியா குருமணி. பிரதமகுரு. சுட்டிபுரம் அம்மன் தேவஸ்தானம். வரணி. இலங்கை.**

### பிரதிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து



கடந்த முப்பத்து நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ஆசி ரியராக. அதிபராகக் கல்விப்பணி புரிந்து அகவை அறுபதை நிறைவு செய்து ஓய்வு பெறும் திரு. கணபதிப் பிள்ளை மங்களேஸ்வரன் அவர்களின் சேவையை நயந்து வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன். மாணவர் ஒருவர் பாடசாலையில் பெறுகின்ற அறிவானது கல்வி எனும் நீண்ட பயணத்துக்கான ஆரம்பம் மட்டுமே என்பதை நன்கு விளங்கி மாணவர் சமூகம் பயன்பெறும் வகையில் பல்வேறு செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி வெற்றியும் கண்டவர். கடமைக்கு முதன்மை வழங்கிவர் ஆற்றிய அளப்பரிய பணிகளுக்கு நன்றி நவில் வதுடன் ஓய்வுகாலம் சிறக்கவும் வாழ்த்துகிறேன்.

**திருமதி. சிவத்திசை சிவநாதன்**
**(பிரதிக்கல்விப் பணிப்பாளர் மாகாணக்கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்)**

### வாழ்த்துச்செய்தி



யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் அதிபராக பணியாற்றி கல்லூரியினதும் சமூகத்தினதும் மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றார் திரு.க.மங்களேஸ்வரன் அவர்கள் அகவை அறுபதின் காரணமாக நிகழும் அரச பணி ஓய்வு குறித்து வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்வடைகின்றோம். மாண்பும். பண்பும். தன்னம்பிக் கையும் மிக்கதொரு பெருமகன் பாடசாலையின் வளர்ச்சியில் அல்லும் பகலும் அக்கறையோடு உழைத்தவர். பாடசாலையின் அபிவிருத்தி வேலைகளிலும் கண்ணும் கருத்துமாய் கடமையாற்றியவர். அன் போடு கூடிய கண்டிப்பும் கடமையில் கண்ணியமும் மிக்கவர். இவர் நிறைந்த ஆரோக்கியத்தோடு நீடுழி காலம் வாழ வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றோம்.

**க.இந்திரன்**
**SDC செயலாளர்.**
**யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.**

### மாறும் உலகில் மாறாது பயணித்தவர்



தென்மராட்சி நகரின் மத்தியில் மிளிரும் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் சிறப்பான கடமையாற்றி 13.08.2020ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திரு.கணபதிப்பிள்ளை மங்களேஸ்வரன் அவர் களுக்கு மணிவிழா வாழ்த்துரை வழங்குவதில் பெரும கிழ்வடைகி-ன்றேன். அதிபர் அவர்கள் தம் பணி வாழ்வில் பல களங்கள் கண்ட வர். உண்மையின் ஊற்றாக. ஆன்மீகத்தின் ஆழமாக. கல்வியின் காவலனாக. ஆளுமையின் அடிஅத்திவாரமாக. நற்புறவின் நாய கனாக திகழ்ந்தவர்.

"பெருமையுடையவர் ஆற்றுவர் ஆற்றின்
ஆளுமையுடைய செயல்"

என்ற வள்ளுவரின் பொருள் நிறைந்த பொன்மொழிக்கேற்ப பற்பல கடமைகளை ஆற்றியுள்ளார். தன் சேவையில் நிறைவு கண்டு இவர் மணிவிழா கொண்டாடும் இவ்வேளையில் இவரது ஓய்வுக்காலம் முழுவதும் உடல் நலமும். உளப்பலமும். ஆன்மீக வளமும் கொண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

**பயஸ் இருதயதாஸ் அருட்பணியாளர்**
**மிருசுவில்**

### மணிவிழா வாழ்த்துச் செய்தி



13.08.2020 அன்று அறுபதாம் அகவையைப் பூர்த்தி செய்து. மணிவிழாக் காணும் நல்லாசான் கொடிகாமப்பதி பெற்றெடுத்த. கணபதிப்பிள்ளை மங்களேஸ்வரன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடை கின்றேன்.

இவர் 26.12.1985 அன்று தமது ஆசிரியப் பணியை ஆரம் பித்து. 10. 02.2000 முதல். அதிபராகப் பதவியுயர்வு பெற்று. ஓய்வுபெறும் வரை அரும்பணியாற்றி வந்துள்ளார்.

இவர் அதிபராக இருந்த காலத்தில். யா/ வரணி மத்தி யகல்லூரி "இசுறு" பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டிருந்த போதும். அதன் பயனை அனுபவிப்பதற்கு ஏற்பட்டிருந்த இடையூறுகளைக் களைந்து. அப் பாடசாலையிலிருந்து க.பொ.த.(உ/த) விஞ்ஞானப்பிரிவு மாணவர்கள் முதன்முதல் பல்கலைக்கழக அனுமதிபெற வழி காட்டிச் சாதனை படைத் தமை மறக்கப்பட முடியாததொன்றாகும். தொடர்ந்து யா/கொடி காமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியிலும். அவர் தம் பணி தன்னாலியன்றவரை ஒரு முன்மாதிரியான அதிபராக அவர் திகழ்ந்தமை. மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

இவர். தம் ஓய்வு காலத்தில் சகல சௌபாக்கியங்களையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருப்பாதங் களை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

**கு.பிரேமகாந்தன்,**
**மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) வடமாகாணம்.**

### வாழ்த்துச் செய்தி



கல்விப்புலத்தில் 14 ஆண்டுகள் ஆசிரியராகவும் 20 ஆண்டுகள் அதிபராகவும் கடமையாற்றி மணிவிழாக் காணும் எமது கல்லூரி முதல்வர் திரு கணபதிப் பிள்ளை மங்களேஸ்வரன் அவர்களின் சேவையை நயந்து பாராட்டுவதில் பெருமகிழ் வடைகிறோம். பழகுவதற்கு எளிமையானவராகவும் கடமையு-ணர்வும் நன்கு திட்டமிடலுடன் கூடிய செயற்றிறன் மிக்கவ ராகவும் திகழும் எமது முதல்வர் தமது ஓய்வுநிலை வாழ்வில் சகல சிறப்புகளும் பெற்று நிறைவான வாழ்வு வாழ்க என எல்லாம் வல்ல இறைவனின் ஆசியுடன் வாழ்த்துகிறோம்.

**பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர்கள்**

**கல்லூரிச் சமூகம்**
**யா/ கொடிகாமம்**
**திருநாவுக்கரசு மத்திய கல்லூரி,**

Congratulations

### வாழ்த்துச்செய்தி



நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் தமது உயிரை பாதுகாக்கவும் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்ந்தும் நோக்குடனும் கல்விமான்கள் பலர் புலம் பெயர் நாடுகளுக்கு இடம் பெயர்ந்த சந்தர்ப்பத்திலும் கூட தனது தாய் நாட் டின் கலை மொழி பண்பாட்டு கலாச்சாரத்தினை தான் மட்டுமின்றி தனது தலைமுறையினரும் குறிப்பாக மாணவ செல்வங்கள் தமது இனத்தின் அடையாளத்தை இழந்து விடாது பாதுகாத்து கொள்வதற்காக அரும் பெரும் செயற்பாடுகளில் ஈடுபட்டு இன்று ஓய்வுபெறும் எமது அன்பிற்கும் நம்பிக்கைக்கும் உரிய அதிபர் திரு. கணபதிப்பிள்ளை மங்களேஸ்வரன் அவர்களுக்கு என்றென்றும் எமது பாராட்டுக்கள்.

வெளி நாட்டில் உள்ள எம்மைப் போன்ற பழைய மாணவ ஆசிரிய சங் கங்களையும் உள்நாட்டு பாடசாலைச் சமூகத்தையும் இணைத்து அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை நாம் மறக்க முடியாது. இவை எல்லாவற் றிற்கும் மேலாக அவருக்கு கை கொடுத்த அவரது குடும்பம். பாடசாலை ஆசிரியர்கள் .மாணவர்கள். பெற்றோர்கள் எல்லோரும் ஒன்றிணைந்துசெயற்திறன் மிக்க ஒரு பாடசாலை சமூகமாக வளர்ச்சி பெற்று நிற்பதற்க எமது அதிபர் ஓர் ஆணிவேராக இருந்தார் என்பதனை மறுக்க முடியாது.இன்று சேவையில் இருந்து ஓய்வு பெறும் எங்கள் பாடசாலைத்தலைவர் நீண்ட ஆயுளையும் சுகபோகங்களையும் மேன்மேலும் பெற்று குடும்பத்தாருடன் இன்புற்று வாழ்வதற்கு எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**பிரான்ஸ் பழைய மாணவ சங்கம்.**

### வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை



அகவை அறுபதை அடைந்து அதிபர் சேவையிலிருந்து 13.08.2020 அன்று ஓய்வு பெறும் யா/ கொடிகாமம் திருநாவுக்க ரசு மத்திய கல்லூரி அதிபர் திரு. கணபதிப்பிள்ளை மங்களேஸ்வரன் அவர்களின் ஓய்வுக் காலம் மன மகிழ் வுடனும் சிறப்புடனும் அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

26.12.1985 இல் ஆசிரியர் சேவையில் இணைந்து பணிபுரிந்ததுடன் 2000ஆம் ஆண்டிலிருந்து அதிபராகவும் பணிபுரிந்து வந்துள்ளார். 2013ம் ஆண்டில் கல் வி அமைச்சினால் "குரு பிரதீபா பிரபா" விருது வழங்கிக் கௌர விக்கப்பட் டார். தனது 34 வருடங்களுக்கும் மேற்பட்ட ஆசிரியரியப் பணியை வவுனியாவிலும். யாழ் மாவட்டத்திலும் ஆற்றி ஓய்வு பெறுகின்றார்.

இவர் தனது ஓய்வுக் காலத்தில் சமூகத்திற்கும் குடும்பத்திற்கும் பயனுள்ள வகையில் சேவையாற்றி நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழவேண் டு மென வாழ்த்துகின்றேன். வாழ்க வளமுடன்!

**த.கிருபாகரன் வலயக்கல்விப் பணிப்பாளர்**
**தென்மராட்சி**

### வாழ்த்துச் செய்தி



கல்விப்புலத்தில் 34 ஆண்டுகள் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றி காலத்தின் கட்டளையின் பேரில் அகவை 60ஐ அடைந்து ஓய்வுபெறும் யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் அதிபர் திரு.க.மங்களேஸ்வரன் அவர்களுக்கு சேவையை நயந்து வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடை கின்றேன். தென்மராட்சியிலே சிரேஷ்ட நிலையில் காணப்படும் அதிபர்களில் இவரும் ஒருவர். கல்விப் பணியிலே இத்தனை ஆண்டுகளை வெற் றிகரமாக நிறைவு செய்வதென்பது இலகுவான விடயமல்ல. இவருடைய சேவைக் காலத்தில் பதித்துச் சென்ற ஆளுமைகள் அவர் கடமையாற்றிய பாடசாலைகளில் அவருடைய சேவைக்குச் சான்றாக அமையும். பல்வேறு படிநிலைகளைத் தாண்டி தனது கல்விச் சேவையைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறும் அதிபர் அவர்களது ஓய்வு காலம் சீரும் சிறப்புமாக அமைய இறையாசி வேண்டி வாழ்த் துகின்றேன்.

**வ.நடராஜா**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர் கோட்டக்கல்வி அலுவலகம் சாவகச்சேரி.**

### செயல்வீரன் மங்களேஸ்வரன் செழிப்புற வாழியவே



அகவை அறுபதில் அரசசேவையில் இருந்து ஓய்வுபெறும் அதிபர் திரு. க.மங்களேஸ்வரன் அவர் களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பிரதேச செயலர் என்ற வகையில் நான் பெருமை கொள்கின் றேன். தனது இருபத்தைந்தா வது அரச பணியில் ஆசிரியராக இணைந்து கொண்டநாள் முதல் ஓய்வு பெறும்வரை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் தான் கடமையாற்றிய பாடசாலைகளின் வளர்ச் சிக்கும் அயராது பாடுபட்ட ஒருவராவார். கடந்த மூன்றாண்டுகளாக கொடிகாமம் திருநாவுக்கரசு மத் திய கல்லூரி அதிபராகக் கடமை யாற்றிய காலப்பகுதியில் பாடசாலையில் பல அபிவிருத்தி வேலைகளை அரசிடமிருந்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்தும் நிதிபெற்றுச் செயற் படுத்திய ஒரு செயல்வீரன்.

எந்நேரமும் பாடசாலை வளாகத்தில் தங்கியிருந்து கடமையே கண்ணாக மாணவர்க்கான கற்பித்தல் நடவடிக் கைகளில் முன்னின்று உழைத்த சேவையாளன். மனவிருப்பத்தோடு மகத் தான சேவையாற் றிய அதிபரவர்களின் ஓய்வுக்காலம் அமைதியாகவும் ஆனந்தமாகவும் அமைந்து. நிறைந்த தேகாரோக்கியத்துடன் நீண்ட நாட்கள் வாழ வேண்டுமெனவும் வாழ்த்தி அமைகின்றேன்.

**உஷா சுபலிங்கம், பிரதேச செயலர், தென்மராட்சி.**

E,S Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472

**வேலை தேவை**
சாரதி வேலை எதிர்பார்க்கின்றேன்.
தொடர்பு:- 077 565 9976

# கண்ணீர் அஞ்சலி



எமது ஊரைச் சேர்ந்தவரும், ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய அறங்காவல சபை உறுப்பினரும், பிரபல வர்த்தகருமாகிய அன்பர் **K.வாமதாசன்** அவர்களின் பாசமிகு மனைவி

**திருமதி நாகலெட்சுமி வாமதாசன்**

(அறங்காவல சபை உறுப்பினர், தம்பகைப்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலயம்) அவர்களின் மறைவு எம்மெல்லோரையும் துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறுவதோடு நாகலெட்சுமியின் ஆத்மா நாகம்மையின் பாதாரவிந்தங்களையடைய வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**அதிவந்தனிய சர்வதேச இந்துமத குருபீடாதிபதி,**
**சிவஸ்ரீ.ச.மஹேஸ்வரக்குருக்கள் - குடும்பத்தவர்கள்**
**(ஆதீன சிரேஷ்ட குரு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு**
**பிரதமகுரு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன்கோவில் சுதுமலை, மானிப்பாய்.**

# கூட்டமைப்புடன் பயணிக்க தயார் என்று கூறவில்லை

## விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து பயணிப்பதற்கு தயார் என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் தான் கூறவில்லை என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் வாராந்த கேள்வி பதில் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்க தயார் என்று நான் கூறினேன் என்று செல்வம் அடைக்கலநாதன் கூறியிருக்கிறார் என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில் அவரது அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சில தினங்களுக்கு முன்னர் நான் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் "எமது இனத்தின் நன்மைகருதி, தெரிவுசெய்யப்பட்டுள்ள எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையே சிங்கள பௌத்த பேரினவாதத்தை எதிர்கொள்வதற்கு கொள்கை அடிப்படையில் ஒன்றுபட்ட ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மிகவும் அவசியமாக இருக்கின்றன. இதற்கு ஒத்துழைப்பு வழங்க நானும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் தயாராக இருக்கின்றோம்." என்றே குறிப்பிட்டுள்ளேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கொள்கை என்னவென்று குறிப்பிடவேண்டும். இணைந்த வடக்கு கிழக்கில் சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டித் தீர்வு தரப்படவேண்டும். இன்றேல் இறுதித் தீர்வு தொடர்பில் சர்வதேச மேற்பார்வையின் கீழ் சர்வஜன வாக்கெடுப்பும் அதன் அடிப்படையில் செயற்பாட்டு நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்புதொடர்பில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியுடன் தமிழ்த் தேசியமக்கள் முன்னணியும் தனதுதேர்தல் விஞ்ஞாபனத்தில் அதுபற்றிக் குறிப்பிட்டிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுபற்றி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடாதுவிட்டாலும், அதில் வெற்றியீட்டிய சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது தேர்தல் பரப்புரையின்போது இதுபற்றி வலியுறுத்தி இருந்தார்கள். ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயங்களில் தனதுநிலைப்பாடு என்னஎன்பதைமுதலில் தெளிவுபடுத்த வேண்டும். என்றுள்ளது. (து)

# மரண அறிவித்தல்

## திருமதி சோமசுந்தரம் இராஜேஸ்வரி



அன்னனை மடியில் 22.12.1927 — ஆண்டவன் அடியில் 12.08.2020

இல. 188, ஆடியபாதம் வீதி, நல்லூர், வடக்கு யாழ்ப்பாணம் என்னும் முகவரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் இராஜேஸ்வரி நேற்று (12.08.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் (Rtd.Assist Commissioner of Motor Trafic) துணைவியாரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் (விதானையார்) நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குமாரசாமி (சுங்க இலாகா) மற்றும் மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற புவனேந்திரன் (முன்னாள் றெட்பானா உத்தியோகத்தர்) மற்றும் ஜெயராணி, ஜெயகௌரி ஆகியோரின் பாசமிகு தாயும், சரோஜினி (லண்டன்), தன பாலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பாக்கியம் (ஓய்வுநிலை நூலகர், யாழ்ப்பாணம்), ஜெகநாதன் (Rtd.G.M, MPCS Jaffna), காலஞ்சென்ற Dr. சிவனேசன் ஆகியோரின் அன்பு மாமியும், சிவராமின் (மருத்துவபீட இறுதியாண்டு மாணவன், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்). அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2020)வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

**இல.118, ஆடியபாதம் வீதி,**
**நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**பெண் உதவியாளர் தேவை**
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பல்கட்டுதல் நிலையத்திற்கு பெண் லிகிதர் **(Bill Clerk)** தேவை.
மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
தொடர்பு:- 077 311 8354


யாழ் திரைப்படக் கல்லூரி
Jaffna Film College
Diploma in film Making
Hurry Up To Register



Register before 15th of August 2020
021 222 4550 / 0761380212
யாழ் திரைப்படக் கல்லூரி / Jaffna Film College

# மரண அறிவித்தல்

## கந்தையா மயில்வாகனம்



பிறப்பு - 19.06.1921
இறப்பு - 12.08.2020

வேதரடைப்பு காரைநகரை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் .கொண்ட கந்தையா மயில்வாகனம் அவர்கள் 12.08.2020 புதன்கிழமையன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் வேலுப்பிள்ளை கந்தையா (முகத்துவாரம்), பொன்னாச்சி தம்பதிகளின் புதல்வரும் காரைநகர் குமிழங்குளியைச் சேர்ந்த காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மாரிமுத்து தம்பதிகளின் மூத்த மருமகனும் பார்வதிப்பிள்ளை (பொன்னாலை) அவர்களின் அன்புக் கணவரும் தங்கவேல் (பிரான்ஸ்) அவர்களின் அன்புத் தந்தையாரும், அருந்ததி (பிரான்ஸ்) அவர்களின் மாமனாரும் அனுஷா, ஈஸ்வரன் ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் கந்தையா பத்மநாதன், காலஞ்சென்றவர்களான ஆச்சிமுத்து, பாக்கியம், அன்னலட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2020) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக காரைநகர் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்..

(CS/33471)

தகவல்:
**ப.கைலயங்கிரிநாதன் (பெறாமகன்) 0714330830**
**தங்கவேலு (மகன்) 0033146802134**

**வேதரடைப்பு,**
**காரைநகர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 15.03.1971 — மறைவு 06.08.2018

## அமரர் ஸ்ரீதரன் ஸ்ரீரஞ்சன்

**(உரிமையாளர் - ரஞ்சன் ஜுவல்லரீஸ்)**

*திதி:- அபரபட்ச தசமி* (13.08.2020- வியாழக்கிழமை)

குடும்பத்தின் குலவிளக்காய் சுடர்விட்டு
சட்டென அணைந்ததன் மாயமென்ன
தனியொருவனாய் நின்று எமை தாங்கி
தனியாகப் பிரிந்து சென்றீர்
வாழ்வதற்கு நன்றே வழிகாட்டி
துயரின் ஆழத்தையும் காட்டிச் சென்றீர்

நினைவினிலே கரைந்து ஏங்கி
அனுதினமும் அழுதாலும்
நீர் தந்த வாழ்வுக்கு ஈடாகுமா?
எமைச் சுமந்த உம்மை
நினைவுகளால் சுமப்போம்
எம் இறுதி மூச்சுவரை

*உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**இத்தியடியப் பிள்ளையார் கோயில் வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

## கண்டியில்...

அதனைப் பார்த்தவர்கள் அரசின் அத்தகைய செயற்பாடுகுளுக்கு கடும் கண்டனங்களைப் பதிவிடத் தொடங்கினர். இந்த விடயம் பெரும் பேசு பொருளானதால் அரசு ஆட்சியமைக்கும் நேரத்திலேயே சிறுபான்மையினத்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கிவிட்டதா என்ற கேள்வியும் பலரிடமும் எழுந்தது. இந்தச் சர்ச்சைகளை அடுத்து, அந்தக் கொடிகளை உடனடியாக அகற்றுவதற்கு கண்டி மாநகரசபை நடவடிக்கை எடுத்தது. (ம-த)

## யாழ்.துணை...

எஸ்.ஸ்ரீசற்குணராஜா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இரண்டாமிடத்தில் உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன் மூன்றாமிடத்தில் வணிக முகாமைத்துவ பீடாதிபதி ரி.வேல்நம்பி, நான்காம் இடத்தில் முன்னாள் துணைவேந்தரும், கணிதப் புள்ளிவிபரவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளருமான பேராசிரியர் இ. விக்னேஸ்வரன், ஐந்தாம் இடத்தில் மருத்துவ பீடாதிபதி மருத்துவ நிபுணர் எஸ். ரவிராஜ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டு முன்மொழியப்பட்டுள்ளனர்.

பேராசிரியர் அபே குணவர்த்தன தலைமையிலான மதிப்பீட்டுக்குழுவால் அவர்கள் முன்மொழியப்பட்டுள்ளனர். புள்ளி விபரவியல் துறைப் பேராசிரியர் செ. இளங்குமரன் மதிப்பீட்டுக் குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட மூவருடன், பல்கலைக்கழக மூதவையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பேரவையினால் முன்மொழியப்பட்ட இருவரையும் கொண்ட, மதிப்பீட்டுக்குழு நேற்றுக் காலை கூடியது.

இந்த மதிப்பீட்டுக்குழு ஒவ்வொரு விண்ணப்பதாரிகளாலும் தனித்தனியாக குழுவின் முன் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளையும் மதிப்பீடு செய்த பின்னர், ஆறு பேரில் இருந்து திறமை அடிப்படையில் புள்ளிகளைப் பெறும் ஐந்து பேரின் விவரங்களைப் பேரவை உறுப்பினர்களின் மதிப்பீட்டுக்காக நேற்றைய கூட்டத்தில் சமர்ப்பித்தது.

மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களால் ஒவ்வொரு விண்ணப்பதாரிகளும், தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டனர். அதுபோன்றே முன்மொழியப்பட்ட ஐந்து பேரையும் ஒவ்வொரு பேரவை உறுப்பினர்களும் சுற்றறிக்கையின் படி தனித்தனியாக மதிப்பீடு செய்து புள்ளிகளை வழங்குவர்.

சுயாதீன மதிப்பீட்டுக்குழு உறுப்பினர்களின் தனித் தனி மதிப்பீட்டுப் புள்ளிகள், பேரவை உறுப்பினர்களின் தனித்தனி மதிப்பீட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களையும் பெறும் திறமைப் பட்டியல் பல்கலைக்கழகப் பேரவையின் பரிந்துரையுடன், தகுதி வாய்ந்த அதிகாரியினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, உயர் கல்வி அமைச்சு ஊடாகத் தனது பரிந்துரையை ஜனாதிபதிக்கு முன்வைக்கும். 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் படி, ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்துக்கு அமைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, துணைவேந்தர் பதவிக்கு ஒருவரைத் தெரிவு செய்வார் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## பிரணாப்...

புதுடெல்லி, ஒக. 13

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் கவலைக்கிடாக உள்ளார் என்று அவருக்குச் சிகிச்சை வழங்கும் டெல்லி இராணுவ மருத்துவமனை அறிவித்துள்ளது. டெல்லிமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜிக்கு ஏற்கனவே அறுவைச் சிகிச்சை நடந்துள்ள நிலையில் கொரோனா பாதிப்பும் இருப்பதால் அவருடைய உடல்நிலை மிக ஆபத்தான கட்டத்தில் உள்ளது. அவருக்கு செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டுள்ளது - என்று அந்த இராணுவ மருத்துவமனை மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

## மிதந்துவந்த...

தெரிவித்தனர்.

கஞ்சா பொதிகள் அனைத்தும் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. சந்தேகத்துக்கிடமாக படகுகளும் மீட்கப்படவில்லை. பருத்தித்துறை பொலிஸாரால் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (த-20)

## அங்குசம்...

உயர்மட்ட கூட்டமொன்று நேற்று கொள்ளுபிட்டியவிலுள்ள கட்சி தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் வதிவிடத்தில் நடைபெற்றது. இதன்போதே புதிதாக மூவரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

ரவி கருணாநாயக்க, தயாகமகே, வஜிர அபேவர்தன மற்றும் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோரின் பெயர்களே ஏற்கனவே பரீசிலனை மட்டத்தில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஐக்கிய தேசியக் கட்சியின் மத்தியசெயற்குழுக் கூட்டம் நாளைவெள்ளிக்கிழமைசிறிகொத்தவில் நடைபெறவுள்ளது. இதன்போது தலைமைத்துவம் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது. கட்சிமறுசீரமைப்பு சம்பந்தமாகவும் ஆராயப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-44)

## சர்வமதங்கள்...

இயங்கிய திணைக்களங்கள் பிரதம அமைச்சரின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. மேற்படி மூன்று அமைச்சுகள் நீக்கப்பட்டிருந்தாலும் அதற்கு பதிலாக பிரதமருக்கான அமைச்சு விடயதானங்களுடன் 'சமய விவகார' என்ற விடயமும் இணைக்கப்பட்டுள்ளது.

இதன்படி நிதி, புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக மஹிந்த ராஜபக்ச செயற்படுவார். மேற்படி மூன்று மதங்கள் தொடர்பான அமைச்சரவைப் பத்திரங்கள் பிரதமர் ஊடாகவே சமர்ப்பிக்கப்படவேண்டிய சூழ்நிலை இதன்மூலம் ஏற்பட்டுள்ளது.

அதேபோல் அமைச்சரவையில் தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள் இருக்கும் நிலையில், இந்து மற்றும் முஸ்லிம் விடயதானங்கள் எதற்காக பிரதம அமைச்சரின் கீழ் கொண்டுவரப்பட்டது என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அத்துடன், புத்தசாசனத்துக்கு தனி அமைச்சு இருக்கும் நிலையில் அறநெறிப் பாடசாலைகள், பிக்குமார் கல்வி, பிரிவெனாக்கள் மற்றும் பௌத்த பல்கலைக்கழகங்களுக்கு இராஜாங்க அமைச்சொன்றை உருவாக்க முடியுமென்றால் இந்து விவகாரத்துக்கு குறைந்தபட்சம் இராஜாங்க அமைச்சு ஒன்றையாவது உருவாக்கமுடியாதா என இந்துக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்து சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைகளம், கத்தோலிக்க சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம் ஆகியன பிரதமரின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. அதேவேளை, அரச கரும மொழிகள் மற்றும் சமூகநல்லிணக்க அமைச்சுக்களும் இல்லாது செய்யப்பட்டுள்ளன. இதற்கிடையில் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படவேண்டும், மாகாணசபைகள் முறைமை அச்சுறுத்தலானவை என கருத்து வெளியிட்டுவரும் சரத் வீரசேகர, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம-44)

## 6 மணி...

9.30 மணியளவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்த நிலையில் 6 மணிநேரம் வாக்குமூலம் வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணை ஆரம்பமாவதற்கு முன்னர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமைக்கான காரணம் தனக்குத் தெரியாது என்று ரிஷாத் தெரிவித்திருந்த நிலையில், உயிர்தஞாயிறு தாக்குதல் தொடர்பிலேயே அவர் விசாரிக்கப்பட்டார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## அவசரமாக...

பெரும் சர்ச்சையாக மாறியுள்ள தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் விவகாரம் மற்றும் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் ஏற்பட்ட பாரிய சரிவு உள்ளிட்ட சமகால நிலைமைகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் பேசப்படவுள்ளன.

தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனம் அதன் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கே வழங்க வேண்டும் என்று கட்சியின் யாழ். மாவட்டக் கிளை தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. எனினும், அந்தத் தீர்மானத்தை மீறி அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் தவராசா கலையரசனுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். இந்த விவாகரத்துக்கு நாளைமறுதினம் நடைபெறும் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்வு காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, தமிழரசுக் கட்சியின் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் ஆகியோர் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் படுதோல்வியடைந்துள்ளனர் எனவும், எனவே கட்சியின் தலைமையில் மாற்றம் அவசியம் எனவும் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்துக்குப் பல தரப்புகளிலிருந்தும் கண்டனங்கள் எழுந்துள்ளன. இது தொடர்பிலும் மேற்படி கூட்டத்தில் பேசப்படும் எனவும் அறியமுடிந்தது. (ம-22)

## சந்தேகநபர்கள்...

யில் வைத்து

நேற்று எட்டுப்பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களின் ஒருவர் பெண்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

மானிப்பாய் பகுதியில் கடந்த மாதம் 21ஆம் திகதி நள்ளிரவு வீடு ஒன்றுக்குள் புகுந்த மர்மக் கும்பல் ஒன்று வீட்டில் இருந்தவர்களை வாளைக் காட்டி அச்சுறுத்தி 16 பவுண் நகைகளை கொள்ளையடித்துச் சென்றது என்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மற்றும் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வந்தனர். யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பிரான்சிஸ் தலைமையிலான குழுவினர் இந்த விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்த நிலையில் நவாலி பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபர் ஒருவரைக் கைது செய்து விசாரணை செய்தபோது அவரிடம் இருந்து 2 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை மீட்கப்பட்டது. அவரிடம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த கொள்ளைச் சம்பவத்துடன் அவருக்குத் தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டது. அவர் வெளிப்படுத்திய மேலதிகத் தகவலின் அடிப்படையில் குறித்த கொள்ளையுடன் தொடர்புடைய மேலும் 8 பேர் வட்டுக்கோட்டைப் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 12 பவுண் நகைகள் மீட்கப்பட்டன. கொள்ளைக்குப் பயன்படுத்திய வாள், மோட்டார் சைக்கிள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. கைதானவர்கள் யாழ்ப்பாணம், சங்கானை, பருத்தித்துறை பகுதிகளைச் சேர்ந்தவர்கள். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம20)

## சசிகலாவுக்கே...

வித்தார் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரான மாவை சோ.சேனாதிராசா.

நேற்று இரவு உதயனுக்கு வழங்கிய பிரத்தியேகச் செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர். மாவை மேலும் தெரிவித்ததாவது:

தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் என்னிடம் இருக்கவில்லை. அதைப் பயன்படுத்தி பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் சசிகலாவை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவே நான் திட்டமிட்டிருந்தேன். எனினும், கட்சி ஆதரவாளர்கள் மற்றும் புலம்பெயர் தேசத்து உறவுகளின் கோரிக்கைகள், வலியுறுத்தல்கள் என்பனவற்றின் அடிப்படையிலேயே தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குச் செல்ல நா்ன் சம்மதித்தேன். தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குச் சென்றிருந்தாலும் அடுத்த சில மாதங்களில் அல்லது சில காலங்களில் பதவியில் இருந்து விலகி பிறிதொருவருக்கு இடம்கொடுத்திருப்பேன் என்பதை என்னால் உறுதியாகக் கூடமுடியும். தேசியப் பட்டியலை அம்பாறைக்கு கொடுத்தமையை தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் கொடுத்த விதம்தான் தவறு. கட்சியின் உயர் மட்டங்களுடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடனும் கலந்தாலோசித்துத் தான் இந்த முடிவை எடுத்திருக்க வேண்டும் என்றார். (ம-22)

## ஒருங்கிணைப்புக்...

குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக டக்ளஸ் தேவானந்தாவும், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவ்ராக நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனும், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவராக காதர் மஸ்தானும் நியமிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த அனைத்து ஒருங்கிணைப்புக் குழுக்களின் இணைத் தலைவராகவும் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

## இராஜாங்க...

சமரவீர அதில் குறிப்பிட்டுள்ளதாவது:

பல்வேறு எதிர்ப்பை மீறி, ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்றியை நீதியமைச்சராக நியமிக்க பிரதமர் எடுத்த தீர்மானம் சிறந்த தீர்மானம். அதேநேரம் அமைச்சரவையில் உள்ள ஏனைய உறுப்பினர்கள் குறித்து அக்கறை செலுத்தவில்லை. இராஜாங்க அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள துறைகள் கேலிக்குரியவை - என்றுள்ளார்.

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்திருந்த மங்கள சமரவீர இறுதி நேரத்தில் நாடாளுமன்ற அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வைத்தியர்கள் பற்றாக்குறை:

# முல்லையில் போராட்டத்துக்கு அழைப்பு

முல்லைத்தீவு, ஓக.13

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நிலவும் மருத்துவர்கள் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யக் கோரி எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மருத்துவமனையில் கடந்த பல மாதங்களாக நிலவி வரும் வைத்தியர்கள் வெற்றிடம் இதுவரை நிரப்பப்படவில்லை. மாவட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பல தடவைகள் சம்மந்தப்பட்ட அமைச்ச, மற்றும் திணைக்களங்களுக்கு எடுத்துக்கூறியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாவட்ட மருத்துவமனை மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை மாவட்ட வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்தி ஒன்றியம் ஆகியவை கிராம மக்களுடன் இணைந்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார்கள். (ரி3-19)

# வரி அதிகரிப்பால் சீவல் தொழிலாளர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக.13

**போத்தலில் பனம்கள் அடைப்பதற்கான வரியை அரசாங்கம் அதிகரித்துள்ளமையால் யாழ். மாவட்டத்திலுள்ள தெங்கு பனை உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் இத் தொழிலை நிறுத்தியுள்ளன. இதனால் சீவல் தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.**

யாழ். மாவட்டத்தில் 13 தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றின் கீழ் பல கள்ளுத் தவறணைகள் இயங்குகின்றன. இத் தொழிலை நம்பி சுமார் 3500 இற்கும் மேற்பட்ட சீவல் தொழிலாளர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

தை மாத்திலிருந்து கிடைக்க ஆரம்பமாகும் பனம் சில மாததங்களுக்குப் பின்னர் படிப்படியாகக் குறைவடைந்து ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் முற்றாக அற்றுப் போகின்றது. இதனால் பனம் கள்ளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் விற்பனை செய்வதற்காக போத்தல்களில் அடைத்து வைத்து தவறணைகள் மூலம் விற்பனை செய்யப்படுவது வழக்கம். இந்நிலையில் போத்தல்களில் பனம் கள் அடைப்பதற்கான வரியை அரசாங்கம் திடீரென்று அதிகரித்துள்ளது. நூறு ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் ஒரு போத்தல் கள்ளுக்கு 31 ரூபா வரி செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மேற்படி சங்கங்கள் போத்தல்களில் கள் அடைக்கும் தொழிலை ஓகஸ்ட் மாதத்திலிருந்து நிறுத்தியுள்ளன. இதனால் சீவல் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்திலுள்ள 13 தெங்கு, பனம்பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மாதம் ஒன்றுக்கு சுமார் பதினையாயிரம் போத்தல் கள்வரை கள் அடைக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி1-115)

## கிராம மக்களின் இருப்பைப் பலப்படுத்த புலம்பெயர் தமிழர் முன்வரவேண்டும்

*முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை*



முல்லைத்தீவு, ஓக.13

புலம்பெயர்ந்து வாழ்கின்ற மக்கள், எல்லைக் கிராம மக்களின் இருப்பினைப் பலப்படுத்துவதற்கு உதவிசெய்ய முன்வரவேண்டும் என்றும், கிராம மக்களுடன் நாங்கள் தொடர்ந்து செயற்பட வேண்டிய நிலை உள்ளது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களான ஒதியமலை மற்றும் காஞ்சிரமோட்டை கிராமங்களுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர், வாக்களித்த மக்களைச் சந்தித்ததுடன் மக்களின் பிரச்சனைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டுள்ளனர். அச் சந்திந்திப்புக்களின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இச் சந்திப்பின் போது விவசாய நிலங்களைப் பயன்படுத்த படையினர் தடையாக இருக்கின்றனர் என ஒதியமலை விவசாயிகள் முறையிட்டுள்ளார் கள்.

இந்தக் காணிகள் மகாவலி 'எல்' வலயத்திற்குள் சுவீகரிக்கப்பட்டுள்மையால் இந்த நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்த விவசாயிகள், காணியில் விவசாயம் செய்யும்போது காணி உறுதிப் பத்திரங்களைக் காட்டுமாறு படையினர் கேட்கின்றனர் எனவும், விவசாய காணியில் செய்கை பண்ண முடியாத அளவுக்கு அச்சறுத்தல்களுக்கு தாம் உள்ளாகியுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, காஞ்சிரமோட்டை கிராம மக்கள் தாம் குடியேறி நீண்டகாலம் ஆகியும் எதுவித அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்கப்படவில்லை என குற்றம் சுமத்தியுள்ளனர். (ரி3-19)

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

சாவகச்சேரி,ஓக.13

ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் நாவற்குழி பகுதியில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 900 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்தியபோது 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (ஜ-9)

## வாகன விபத்தில் ஒருவர் காயம்

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று பேரூந்துடன் மோதியதில் காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இந்திராபுரம் சந்தியில் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் நோக்கி வந்த பேரூந்து அதில் பயணித்தவர்களை இறக்கிக் கொண்டிருந்த வேளையில் அதே திசையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் எதிரே வாகனம் வந்ததால் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானது. (ரி2-9)

## விதிமுறை மீறி சாரத்தியம் ரூ.2 7,500 தண்டம்

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய சாரதிகள் ஆறு பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 2 இலட்சத்து 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

மது போதையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தினாரென இருவருக்கும், மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் மூவருக்கும், மதுபோதையுடன் புகைப் பரிசோதனை அறிக்கை மற்றும் வாகன வரிப் பத்திரம் ஆகியவற்றை வைத்திருக்காத குற்றச்சாட்டுக் களுடன் ஆறு பேருக்கும் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது. (ரி2-9)

மரண அறிவித்தல்

முத்துத்தம்பி மகாதேவன்

(இளைப்பாறிய ஆசிரியர்)

உரும்பிராயை பிறப்பிடமாகவும், தொம்பை வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி மகாதேவன் நேற்று (12.08.2020) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி முத்துத்தம்பியின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற பண்டிதர்சிவசம்பு - பஞ்சசோதி தம்பதியரின் மருமகனும், சிவயோகசோதியின் அன்புக் கணவரும், வாமதேவன், ஈஸ்வரதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவசோதி, காலஞ்சென்ற சிவஞானசோதி, சிவானந்தன், காலஞ்சென்ற சிவநேசசோதி, சிவராசசோதி, சிவகுமார் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (13.08.2020) வியாழக்கிழமை பிற்பகல் 01.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



மண்ணில் 16.08.1936 விண்ணில் 12.08.2020

தொம்பை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்: மனைவி
குடும்பத்தினர்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.